GOKULAM
கோகுலம்
ஜனவரி '98 ரூ. 5.00





கோகுலம்

ஜனவரி 1998
மலர் : 15
இதழ் : 12

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்



அருமைச் சிறுவர் சிறுமியரே,

யானை என்பது காகம் போன்ற
ஒரு வெண்மையான பட்சி!
அது ஆகாயத்தில்
ஆனந்தமாகப் பறக்கும்!
குழந்தைகள் அதைப் பிடித்துக்
கொண்டு வந்து
கூண்டில் அடைத்துக்
குஷியாக விளையாடுவார்கள்!

நான் உங்களைப் போல ஏழெட்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது இந்த வேடிக்கைக் கவிதையைக் கேட்டுவிட்டு, விழுந்து விழுந்து சிரித்தது 55 வருஷங்களுக்குப் பிறகு இன்றும் பசுமையாக நினைவிருக்கிறது.

இந்தக் கவிதையை எனக்கு அன்று சொன்னவர் சதாசிவம் மாமா! அண்மையில் தமது 95வது வயதில் இயற்கை எய்திய சதாசிவம் அவர்கள்தான்.

எம்.எஸ். என்று சொன்னால் உடனே, 'ஓ! நான் அவர் பாட்டு கேட்டிருக்கேனே' என்று சொல்வீர்கள். எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கணவர் சதாசிவம், பெரிய சாதனையாளர்.

சதாசிவம்தான் இந்த கோகுலம் பத்திரிகையை உங்களுக்காகவே ஆரம்பித்தார். அவருக்குக் குழந்தைகளிடம் ரொம்பப் பிரியம். அவர்களுக்கு மிட்டாய் வழங்கி சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்.

சதாசிவத்தின் அருமை நண்பர், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி. 'பொன்னியின் செல்வன்', 'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்' போன்ற அற்புதமான சரித்திர நாவல்களை எழுதியவர். இருவரும் சேர்ந்து கல்கி பத்திரிகையைத் தொடங்கினார்கள். பிற்காலத்தில் சதாசிவம் இதே நிறுவனத்திலிருந்து கோகுலம் பத்திரிகையும் குழந்தைகளுக்காகப் பிரசுரமாக வழி வகுத்தார்.

சதாசிவம், சுதந்திரப் போராட்ட வீரர்; காந்திஜியின் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டவர்; சினிமா உலகிலும் புகுந்து, ''மீரா'' என்ற திரைக் காவியத்தை உருவாக்கியவர்; ராஜாஜிக்கு வலது கரமாகத் திகழ்ந்தவர்; கொடை வள்ளல்.

கடவுள் பக்தி மிக்கவர். காஞ்சி பரமாச்சார்யாளிடமும் சத்திய சாயிபாபாவிடமும் ரொம்ப ஈடுபாடு கொண்டிருந்தார்.

இந்தப் பத்திரிகையின் நிறுவனரான அவருக்கு அஞ்சலி செலுத்துவோம்.

சென்ற இதழில் சுழல் கோப்பை பற்றி அறிவித்ததிலிருந்து ஏராளமான தம்பி - தங்கைகள் சுறுசுறுப்படைந்து தங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, விலாசம் முதலியன குறிப்பிட்டு எழுதிக் குவித்து வருகிறார்கள். தகுதியானவை நிச்சயம் கோகுலத்தில் பிரசுரமாகும். 1998 முடிவில் எந்தப் பள்ளி சுழல் கோப்பை பெறப் போகிறதோ, பார்க்கலாம்! அது சரி, உங்கள் பள்ளி நூலகத்துக்கு கோகுலம் வாங்கப்படுகிறதா? இல்லையெனில் உங்கள் தலைமை ஆசிரியரிடம் கோரிக்கை வைக்கலாமே?

புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள்!

அன்புடன்,

ஆசிரியர்
(கி. ராஜேந்திரன்)

கோகுலம்

ஜனவரி 1998

இந்த இதழில்...

நமக்கா? உனக்கா?

குப்பனும் சுப்பனும் நண்பர்கள். இருவரும் ஒரு கல்யாணத்திற்காக காட்டுப் பாதையில் அடுத்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். வழியில் ஒரு பணப்பை கிடந்தது. அதில் நிறையப் பணம் கட்டுக்கட்டாக இருந்தது.

சுப்பன் உடனே பணப்பையை எடுத்து தன் பைக்குள் வைத்துக் கொண்டார்.

குப்பனைப் பார்த்து "நமக்கு நல்ல காலம் தான்!" என்று பையைக் காட்டிக் கூறினார் சுப்பன்.

"நமக்குன்னு சொல்லாதே! உனக்குன்னு



சொல். இரண்டிற்கும் நிறைய வித்தியாசமிருக்கு" என்றார் குப்பன்.


இருவரும் பேசிக் கொண்டே நடந்தனர். திடீரென வழிப்பறி திருடர்கள் இருவரையும் மடக்கினர்.

"நாம் தொலைந்தோம்" என்றார் சுப்பன் நடுக்கத்துடன்.

"நாம் என்று சொல்லாதே! நான் என்று சொல். இரண்டிற்கும் வித்தியாசம் உண்டு" என்று சொல்லிக் கொண்டே ஓட்டம் பிடித்தார் குப்பன்.

கருத்து: பிரெஞ்சு குட்டிக் கதைகள்.

ஆர். லோகநாதன், நாகூர்.



வாழ்த்து அட்டை செய்வோமா?

பொங்கல், புத்தாண்டு, பிறந்த நாள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு வாழ்த்து அட்டைகள் அனுப்புவது வழக்கமாகி விட்டது. வாழ்த்து அட்டைகளை கடையில் வாங்கி அனுப்புவதை விட நாமே செய்து அனுப்பினால் நமக்கும் திருப்தி. அனுப்பப்பட்டவருக்கும் சந்தோஷம்! மிகவும் சுலபமாகச் செய்யக் கூடிய வாழ்த்து அட்டை இதோ.

என்னென்ன தேவை?

இங்க், பல் தேய்க்கும் பழைய பிரஷ், பழைய சீப்பு, தடித்த வெள்ளைக் காகிதம், அழகான இலைகள்.

எப்படி செய்யலாம்?

வெள்ளைக் காகிதத்தை எடுத்து அதன் நடுவில் ஒரு இலையை வைத்துக் கொள்ளுங்கள். பிரஷ்ஷை இங்கில் நனைத்து சீப்பு மீது தேய்க்க வேண்டும். இலை பறந்து விடாமல் இருக்க சின்ன எடையைத் தூக்கி வைத்து விடுங்கள். எல்லா இடங்களிலும் இங்க் விழுமாறு தேய்த்து விடுங்கள். இங்க் காய்ந்த பின் மெதுவாக இலையை எடுத்து விடுங்கள். இலை இருந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில் இங்க் புள்ளி புள்ளியாக விழுந்திருக்கும். இலையின் வடிவம் அழகாகக் காட்சியளிக்கும். நடுவில் நீங்கள் விரும்பும் வாசகத்தையும் எழுதி அனுப்பலாம்.

படம் 2-ல் உள்ளது போல் ஏதாவது படத்தை வரைந்து, வெட்டி இலைக்கு பதில் பயன்படுத்தலாம்.


வாட்டர் கலர் வைத்திருப்பவர்கள் பல நிறங்களையும் இங்க்கிற்கு பதில் பயன்படுத்தினால் இன்னும் அழகாக இருக்கும்.



எப்படி? எதனால்? ஏன்?

பூமியின் வேகம் குறைகிறதா, எப்படி?

ஒவ்வொரு நாளும், அதன் மறு நாளை விட நீண்ட நாளாகும். என்ன, யாரிடம் கதை விடுகிறீர்கள் என்கிறீர்களா? கதையல்ல, உண்மைதான். ஒவ்வொரு நாளின் நேரமும், தினந்தோறும் 0.0000,0002 வினாடி என்ற கணக்கில் குறைந்து கொண்டே வருகிறது. இது எப்படி சாத்தியமாகும்? பூமியின் சுற்று வேகம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகிறது. இது



எளிதில் கணக்கிட முடியாதபடி, மிக மிகக் குறைவான நேரமாக இருப்பதால், நிறைய வருடங்கள் கழிந்த பின்னர்தான் பூமியின் வேகம் எவ்வளவு குறைந்துள்ளது என துல்லியமாகக் கணக்கிட முடியும். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்ததை விட, இன்று ஒரு நாளின் நேரத்தில் 0.00073 வினாடிகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்! ஒரு முழு நூற்றாண்டுக்கு முன் இருந்ததை விட இப்போது அதாவது 36,525 நாட்களில் மொத்தமாக 13 வினாடிகள் குறைந்துள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு 13 வினாடிகள் தாமதம் என்ற விகிதத்தில்; நாளின் நேரம் அதாவது பூமியின் சுற்று வேகம் குறைந்து கொண்டே போகிறது. இது சந்திரனின் ஈர்ப்பு விசையால் ஏற்படுகிறது. ஒவ்வொரு பொருளுக்கும் ஈர்ப்பு விசை உண்டு. எனவே பூமியை சந்திரன் இழுக்கிறது; அதே போல சந்திரனையும் பூமி இழுக்கப் பார்க்கிறது. பூமியின் இழுப்புக்கு ஆட்பட்டு சந்திரன் பூமியை சுற்றி வருகிறது, நாம் தட்டாமாலை சுற்றுவது போல்தான். இந்த சுற்றுப்பாதை நீள் வட்டத்தில் இருப்பதால், சில சமயம் பூமியை நெருங்கியும், சில சமயம் பூமியிடமிருந்து விலகியும் சுற்றுகிறது. அப்போது பூமியின் அருகில் வரும்போது, சந்திரனின் ஈர்ப்பு விசை, பூமியை இழுக்கப் பார்க்கும் போது, அதன் மேலுள்ள நீர்ப்பரப்பு உயரே அலைகளாய் எழும்புகிறது. எனவே பௌர்ணமி மற்றும் அமாவாசை தினங்களில் சந்திரன் பூமிக்கு மிக அருகில் இருப்பதால், உயரமான அலைகள் எழும்புகின்றன. இதற்கு ஓத ஏற்றம் என்று பெயர். இந்த ஓத ஏற்றம், பூமி மற்றும் சந்திரனின் ஈர்ப்பு விசையுடன் மோதி, உராய்விணை உண்டாக்கி, 'பிரேக்' போல் செயல்படுகிறது. எனவே பூமி மற்றும் சந்திரனின் சுற்று வேகம் குறைகிறது. இது மிக மிக மெதுவாகவே நடைபெறுகிறது. கி.பி. 5000 கோடி ஆண்டில் எவ்வளவு குறைந்திருக்கும் தெரியுமா? அன்றைய ஒருநாள் என்பது இன்

றைய 47 நாட்களுக்கு சமமான நேரமாக இருக்கும்! என்ன மயக்கம் போட்டு விடாதீர்கள்! நாம் இருக்க மாட்டோம் அதைப் பார்க்க. நம் சந்ததியினர், மனித இனத்திலிருந்து வேறு ஏதாவது இனம் உருவாகியிருக்கும் அதைக் காண! அல்லது அந்த இனம் வேறு கிரகத்திற்கு அல்லது வேறு அண்டத்திற்கு குடியேறியிருக்கும்!

சளி பிடிப்பதில்லை, எதனால்?

பொதுவாக துருவ பகுதிகளில் வாழும் எவருக்கும் சளி பிடிப்பதோ காய்ச்சல் வருவதோ, அன்றி வயிற்றுப் போக்கு ஏற்படுவதோ கிடையாது தெரியுமா? ஏன்? இவற்றை உண்டாக்குபவை பாக்டீரியா மற்றும் வைரஸ் போன்ற நுண்கிருமிகளே! இவை வெப்பமான சீதோஷண நிலைகளில்தான் சந்தோஷமாய், ஆடிப்பாடி, திரிந்து, இனப் பெருக்கம் செய்து தன் இனத்தைப் பெருக்கி நம்மை கஷ்டப்படவைக்கின்றன. ஆனால் துருவப் பகுதிகள் பனிக்கட்டியால் மூடப்பட்டிருப்பதால், அங்கு வெப்ப நிலை மிகக் குறைவாக -20°C ஆக இருக்கும். இந்த வெப்பநிலை, நோய்க் கிருமிகள் வாழ ஏற்றதல்ல; கிருமிகள் உயிர் வாழ முடியாது. எனவே துருவப் பகுதிகளில் நமக்கு சளி பிடிப்பதில்லை! அப்பாடா! அங்கு சென்றால் சளியின்



தொந்தரவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் குளிர்....?

சந்திரன் ஒவ்வொரு நாளும் தாமதமாகத் தோன்றுவது ஏன்?

பௌர்ணமியின் போது சந்திரனின் உதயத்தைக் கவனித்திருக்கிறீர்களா? வட்ட நிலா பூமியை வலம் வரும்! அதுசரி! எத்தனை மணிக்கு அடிவானிலிருந்து



மேலெழும்புகிறது சொல்லுங்களேன்! தெரியாதா? சுமாராக 6.05 என்று வைத்துக் கொள்ளுங்கள். மறுநாள் சந்திரன் எப்போது உதிக்கும்? கவனித்துப் பாருங்கள். முதல் நாளைவிட கொஞ்சம் தாமதமாய் வானை எட்டிப் பார்க்கும்; அதன் மறுநாள் முதல் நாளைவிட தாமதமாய்த்தான் உலா வர எழும்பும். இது ஏன் தெரியுமா? சந்திரன் பூமியைச் சுற்றி வரும் வேகத்தை விட, பூமி தன் அச்சில் சுற்றும் சுற்று வேகம் கொஞ்சம் அதிகம். சந்திரன், பூமி இவைகளின் சுற்று வேகத்திற்கு இடையில் சற்று நேர வித்தியாசம் காணப்படுகிறது. எனவேதான் நிலா வானில் உதிக்கும் போது, ஒவ்வொரு நாளும் முந்தைய நாளைவிட தாமதமாகவே உதிக்கிறது. இது தான் பூமிக்கும், சந்திரனுக்கும் இடையிலுள்ள நேர வித்தியாசம்!



பாவம் குதிரை!

கந்தப்பன் ஒரு விறகுவெட்டி. அவனிடம் இருந்தவை ஒரு கழுதை, ஒரு குதிரை. இரண்டையும் கயிரால் கட்டியிருப்பான். விறகை வெட்டிக் கழுதை மேல் ஏற்றி, குதிரையின் மீது அவன் உட்கார்ந்து விறகை விற்று பிழைப்பு நடத்தி வந்தான்.

தான் மட்டும் பாரம் சுமக்கக், குதிரை 'ஹாய்'யாக இருக்கிறதென்று மனவேதனை கழுதைக்கு!

தான் எசமானையும் சுமந்து கொண்டு கட்டைகளுடன் கழுதையையும் இழுத்துக் கொண்டு மூச்சுவாங்க ஓடுகிறோமே என்ற மன வேதனை குதிரைக்கு!

எத்தனை நாள் இப்படி வேதனைப்படுவது? ஒருவழி காண வேண்டுமென இரண்டும் சிந்தித்தன. "நாளைக்கு சண்டித் தனம் செய்யப் போகிறேன். நீயும் செய். நான் முன்னுக்கு இழுக்கிறேன். நீ பின்னுக்கு இழு!" என்றது குதிரை.

"வேண்டாம்! நம்முடைய தலைவிதி என்று காலந்தள்ளுவோம்" என்றது கழுதை.

"நான் சொல்வதைச் செய்" என்று மிரட்டியது குதிரை.

"சரி" என்று கழுதையும் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டது.

மறுநாள் கொஞ்ச தூரம் போனதும் குதிரை முன்னுக்கிழுத்து முரண்டு செய்தது. கழுதை பின்னுக்கிழுக்க முதுகிலுள்ள பாரத்தினால் இழுக்க முடியாமல் கட்டைகளுடன் கீழே விழுந்தது. கந்தப்பன் கீழே இறங்கி கட்டைகளை எடுத்துக் குதிரையின் மேல் போட்டுக் கட்டி தானும் ஏறிக் கொண்டான். கழுதையை மட்டும் குதிரையின் பின்பு கட்டி நடத்திச் சென்றான்.

பாவம், குதிரை! விதியை மதியால் மாற்றலாம் என்ற பேராசை விபரீதமாகிக் கட்டையையும் கந்தப்பனையும் சுமந்து செல்ல நேர்ந்தது.

— ஏழ்வரைக்கடியான்


பூமியும் ஒளிருமா?





சூரியனின் ஒளி பூமியை வந்தடையும் நேரம் 8 நிமிடம் 20 வினாடிகள் என்பது உங்களுக்குத் தெரியும்! சந்திரனின் வெளிச்சம் பூமியை வந்தடைய எவ்வளவு நேரம் ஆகிறது தெரியுமா? சூரிய ஒளி சந்திரனில் பட்டு பிரதிபலித்தபின் பூமியை வந்தடைய எடுத்துக் கொள்ளும் நேரம் 1.3 வினாடிகள்தான்! பூமியிலிருந்து நாம் பார்க்கும் போது, சூரிய ஒளி சந்திரனில் பட்டு, அது பிரதிபலிக்கிறது; அதே போல செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி மற்றும் சனி கிரகங்களிலும் சூரிய ஒளி பட்டு, பிரதிபலிப்பதை நாம் அறிவோம். அது போல, பூமியும் பிரதிபலிக்குமா? நிச்சயமாய்! நாம் பூமியை சந்திரனிலிருந்தோ, வேறு கிரகங்களிலிருந்தோ பார்த்தால், அதுவும் கூட சந்திரன் போல, பளபளப்பாய் மின்னும்! ஆனால் பூமியின் மேல் பகுதியில் மேகங்கள் காணப்படுவதால், பூமியிலிருந்து வரும் ஒளி சந்திரனின் ஒளி போல ஒரே சீராக இருக்காது! அவ்வளவுதான்.

— எஸ். மோகனா



கரும்பு பற்றித் தெரியுமா?

நமக்கெல்லாம் ஜனவரி 14 அன்று பொங்கல் என்றால் அசோக்கிற்கு டிசம்பரிலேயே பொங்கல் ஆரம்பித்துவிடும்! என்ன, ஆச்சர்யமாக உள்ளதா? கரும்பு விற்கப்படும் நாளிலிருந்தே பொங்கல் ஆரம்பித்து விடும் அவனுக்கு.

தினமும் பள்ளி விட்டு வந்ததும் கரும்பு சாப்பிடாமல் விளையாடப் போக மாட்டான்!

அன்று பொங்கல் திருநாள். அம்மா பொங்கல் செய்து கொண்டிருந்தார். ரஞ்சனியும் அசோக்கும் புது உடை அணிந்திருந்தனர். அம்மாவுக்கு உதவியாகப் பொங்கலைக் கிளறிக் கொண்டிருந்தாள் ரஞ்சனி. தானும் பொங்கல் செய்ய உதவுவதாகக் கூறினான் அசோக்.

"போடா அந்தப் பக்கம். உனக்கெல்லாம் செய்யத் தெரியாது" என்று அலட்டிக் கொண்டாள் ரஞ்சனி.

"அம்மா, அம்மா! எனக்குப் பசிக்கிறது. கரும்பு வெட்டித் தாங்க" என்று நச்சரிக்க ஆரம்பித்தான் அசோக்.


"பொங்கல் படைச்ச பிறகுதான் கரும்பெல்லாம் வெட்டணும்" என்று அம்மா சொல்லி முடிப்பதற்குள் -

"ஏண்டா அசோக், தினமும் கரும்பு சாப்பிடுறியே, இன்னும் ஆசை தீரலையா?" என்று கேட்டாள் ரஞ்சனி.

"அக்கா, உனக்கு பொங்கல் செய்யத் தெரியலாம். ஆனால் கரும்பு பற்றித் தெரியுமா உனக்கு?" என்றான் அசோக்.

"பெரியவங்க நீங்க! உங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னீங்கன்னா கேட்டுக்குறேன்" என்று கிண்டல் செய்தாள் ரஞ்சனி.

ரஞ்சனியின் கிண்டலை அலட்சியப் படுத்திவிட்டு சொல்லத் தொடங்கினான் அசோக்.



முக்கியமான பயிர்களில் கரும்பும் ஒன்று. பழங்காலத்திலிருந்தே கரும்பு பயிர் செய்யப்பட்டு வருகிறது.

கரும்பு பெரிய புல் வகைத் தாவரத்தைச் சேர்ந்தது. இவற்றின் தண்டுப் பகுதிகளில்

தாம் நாம் சுவைக்கும் இனிப்பு சேமித்து வைக்கப்பட்டுள்ளது. தண்டுப் பகுதி பல கணுக்களால் ஆனது. ஒவ்வொரு கணுவிற்கு இடையிலும் ஒரு வளையம் காணப்படும். இந்த வளையம் கரும்பின் இலை உதிர்வதால் உண்டாகிறது.

இலை வெட்ட வெட்ட வளரக் கூடியவை. கரும்பு வளர்ந்து, பூத்து விதைகளை உண்டாக்கினாலும், பொதுவாக விதையின் மூலம் பயிர் செய்வதில்லை. கணுக்களை வெட்டி நிலத்தில் நட்டு, புதிய பயிரை உருவாக்குகிறார்கள். ஒவ்வொரு கணுவிலும் வேர் உருவாவதற்கான மொட்டுகள் இருக்கும். ஒட்டு வகைக் கரும்புகளை உற்பத்தி செய்வதற்கு மட்டும் விதைகளைப் பயன்படுத்துகின்றனர்.

கரும்பிற்கு உறுதியான ஆணி வேர் கிடையாது. பல கிளைகளாக சின்னச் சின்ன வேர்கள் காணப்படும்.

நல்ல நீர்ப்பாங்கான நிலங்களில் கரும்பு செழித்து வளரும். இவற்றிற்கு அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டும்.

மஞ்சள் கரும்பு, செங்கரும்பு, நாமக்கரும்பு என பல வகைகள் உள்ளன.

கரும்புச் சாறிலிருந்து வெல்லம், சர்க்கரை, ஜீனி, கற்கண்டு முதலியவை தயாரிக்கப்படுகின்றன. கரும்புச் சாறு உடலுக்கு நல்லது. கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கப்படுகிறது.

கரும்பு உற்பத்தியில் இந்தியா முதலிடம் பெறுகிறது. கியூபா, பிரேசில், ஜாவா போன்ற நாடுகளிலும் கரும்பு விளைகின்றது. தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதும் கரும்பு பயிர் செய்யக்கூடிய தட்ப வெப்ப நிலை நிலவுகிறது.

அசோக் சொல்லி முடித்தான். ரஞ்சனி மட்டுமல்ல; அம்மா, அப்பாவும் ஆச்சர்யமாகப் பார்த்தார்கள்.

"நீ விரும்பிச் சாப்பிடுவது மட்டுமல்லாமல் கரும்பு பற்றி இவ்வளவு விஷயம் தெரிஞ்சு வச்சிருக்கியே" என்று பாராட்டினாள் ரஞ்சனி.

"அம்மா பொங்கல் படைச்சாச்சா, நான் கரும்பு சாப்பிடட்டுமா?" என்றான் மீண்டும் அசோக்.

"உனக்கில்லாத கரும்பா, எடுத்துச் சாப்பிடு" என்றார் அம்மா.

அட்டையில் : **ஸ்ரீரஞ்சனி, அசோக்**
வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

காட்சி - 1

இடம் : குணா வீடு

அப்பா : சுதாக்குட்டி!

சுதா : என்னப்பா?

அப்பா : எங்கே உன் அண்ணன் குணா? அவனையும் கூப்பிடு!

சுதா : அவன் தோட்டத்துலே செடிக்குத் தண்ணி விட்டுக்கிட்டிருந்தான். அதோ அவனே வரான்...

அப்பா : வாடா குணா! உடனே வழக்கம் போல நம்ம திருப்பூர் குமரன் கடைக்கே போங்க! நமக்குப் பழக்கப்பட்ட கடை! தெரிஞ்ச முதலாளி. எதுவானாலும் சொன்னா கேட்டுக்குவாங்க!

சுதா : சரிப்பா!

அப்பா : இந்தாங்க, இந்த 'பர்ஸு'லே ஐந்நூறு ரூபாய் பணம் இருக்கு. ஏதாவது பேசணும்னா கடையிலேயிருந்தே எனக்கு போன் பண்ணி பேசுங்க... ம். தலையை வாரிக்கிட்டு சீக்கிரம் புறப்படுங்க!

அம்மா : டேய், பணம் பத்திரம். பொங்கல் கும்பல் நிரம்பி வழியும், ஜாக்கிரதை!

பொங்கல் பரிசு!



ரெண்டு பேரும் கடைக்குக் கிளம்புங்க. பொங்கல் பண்டிகைக்கு புது 'டிரஸ்' வேணும்னு ஆசைப்பட்டீங்க இல்லே... ம்...ம்... சீக்கிரம் புறப்படுங்க!

சுதா : ஹை... புது டிரஸ்! அண்ணா... புறப்படு.

குணா : அப்பா.. வருஷா வருஷம் பேருக்கு எங்களையும் உங்க கூட அழைச்சுக்கிட்டுப் போய், நீங்களே உங்களுக்குப் பிடிச்ச டிரஸ்ஸா பார்த்து வாங்கித் தர்றீங்க... இந்த வருஷம் இப்படி செய்தா என்ன?

அப்பா : எப்படி?

குணா : நாங்க மட்டுமே கடைக்குப் போய், எங்களுக்குப் பிடிச்ச டிரஸ்ஸை செலக்ட் பண்ணி வாங்கிக்கிட்டு வந்துடறோம்.

அம்மா : டேய், உங்களுக்கு அதெல்லாம் தெரியாது. அனுபவமும் பத்தாது. பேசாம அப்பாவோடவே போய் 'டிரஸ்'ஸை எடுத்துக்கிட்டு வாங்க!

குணா : அம்மா, நீங்க கவலைப் படாதீங்க! நல்ல துணியா பார்த்து, நம்ம பட்ஜெட்டுக்கு அதிகமாகாம வாங்கிக்கிட்டு வந்துடறோம்!

அப்பா : அப்படியே செய்யுங்க. ஆனா

குணா : கவலையே படாதீங்க, வரோம்!

காட்சி - 2

இடம் : துணிக்கடை

குணா : சுதா, நம்ம ரெண்டு பேர் டிரஸ்ஸுக்கும் நானூறு ரூபாதான் ஆகி

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

யிருக்கு போதுமா? இன்னும் ஏதாவது வாங்கணுமா?

சுதா : போதும் போதும். அண்ணா, அதோ அங்கே பாரு, 'மணி பர்ஸ் ஜாக்கிரதை'ன்னு எழுதியிருக்காங்க! உன் மணி பர்ஸ் பத்திரமா இருக்கு இல்லே?

குணா : ம். வா... வா...

கடைக்காரர் : குணாத் தம்பி! உனக்கு அதிர்ஷ்டம்தான். இந்தச் சட்டைக்குத்தான் ஏக கிராக்கி, நீ வாங்கியிருக்கிறது கடைசி பீஸ்! சுதா... உங்க அப்பா, அம்மாவே உன் செலக்ஷனைப் பார்த்து அசந்துடப் போறாங்க! இந்தாங்க. 'பண்டிலை' ஜாக்கிரதையா எடுத்துக்கிட்டுப் போங்க!

குணா : சுதா... இந்தா பண்டிலைப் பிடி. தண்ணி குடிச்சிட்டு வரேன்! படிக்கட்டு ஓரமா நின்னுக்கோ...

(ஒரு சிறுவன் சுதாவிடமிருந்த பண்டிலைப் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறான்.)

சுதா : அண்ணா! அண்ணா! பண்டில் போச்சு. அந்தப் பையன் பிடுங்கிக்கிட்டு ஓடறான் பாரு!

கடைக்காரர் : பிடிங்க! பிடிங்க!

(அவசரத்தில் குணா கால் தடுக்கி கீழே விழுகிறான்.)

குணா : சே... சரியான சமயத்திலே கால் தடுக்கி ஓடமுடியலே...

சுதா : அண்ணா, அதோ உன் சிநேகிதன் ரகு வரான்.

குணா : டேய் ரகு, சீக்கிரமா அந்தப் பையனைத் துரத்திப் பிடிடா... துணி பண்டிலைப் பிடுங்கிக்கிட்டு ஓடறான்...

ரகு : தெரியும். நானும் பார்த்தேன்!

குணா : பின்னே ஏன் பேசாம நின்னுக்கிட்டிருக்கே?

ரகு : அவன் ரொம்ப தூரம் ஓடிட்டான் குணா. இனிமே அவனைப் பிடிக்க முடியாது!

குணா : சரி, அந்தப் பையனோட முகத்தையாவது கவனிச்சியா?

ரகு : ம்! கவனிச்சேன்! நல்லா நினைவிருக்கு!

குணா : சுதா! கவலைப்படாதே, அப்பாகிட்டே சொல்லி போலீஸ்லே புகார் செய்யலாம்! எழுந்திரு!

காட்சி - 3

இடம் : ரகு வீடு

குணா : ரகு! ரகு!

ரகு : வா, குணா!

குணா : இன்ஸ்பெக்டர் சார், இவன் தான் என் நண்பன் ரகு...!

ரகு : உட்காருங்க சார்.

குணா : ரகு! இன்ஸ்பெக்டர் சார் நேத்து நடந்த விஷயத்தைப் பத்தி உங்கிட்டே விசாரிக்க வந்திருக்கார்.

இன்ஸ்பெக்டர் : ரகு, நேத்து சுதா கிட்டேயிருந்து பண்டிலை பிடுங்கிக்கிட்டுப் போன அந்தப் பையனோட முகத்தை நீ கவனிச்சே, இல்லையா?

ரகு : ம். கவனிச்சேன் சார்!

இன்ஸ் : அவன் எப்படியிருந்தான்?

ரகு : ம்! வந்து.. அவன்.. வந்து...

இன்ஸ் : சரி, இப்ப எங்க ஸ்டேஷன்லே சந்தேகத்துக்கிடமான நாலு பையன்களைப் பிடிச்சு வச்சிருக்கோம்! துணி பண்டிலைத் திருடினவன் அதுலே ஒரு பையனா இருக்கலாம். நீ வந்து அடையாளம் காண்பிச்சா, அவனை இப்பவே கண்டு பிடிச்சுடலாம்!


ரகு : சார் வந்து...

இன்ஸ் : உன் அப்பா எங்கே?


ரகு : வெளியிலே போயிருக்கார்!


இன்ஸ் : அப்பா வந்ததும் அவரோடு ஸ்டேஷனுக்கு வர்றியா?

ரகு : இல்லே சார்... வந்து.. வேண்டாம் சார். விட்டுடுங்க. என்னால அடை



"ஏன் வருத்தமா இருக்கே?"
"ஓடு ரொம்ப பாரமா இருக்கு இறக்கி வைக்க முடியல, அதான்!"
— பொன். குமார்





...ாளம் காட்ட முடியாது!

இன்ஸ் : என்ன ரகு இப்படி பேசறே? திருடனைப் பார்த்த நீயே அவனை அடையாளம் காட்டத் தயங்கறே?

ரகு : எனக்குப் பயமா இருக்கு சார். நான் அடையாளம் காட்டிட்டா அந்தப் பையன் ஒருநாள் என்னைப் பழிக்குப் பழி வாங்கிடுவான் சார்!

இன்ஸ் : ரகு! இந்த மாதிரி பயப்படற தனாலேதான் நம்ம சமூகத்திலே ரௌடிகளும், போக்கிரிகளும் அதிகமாயிட்றாங்க... தைரியமா வா தம்பி! அடையாளம் காட்டினது நீதான்னு அவங்க யாருக்கும் தெரியாதபடி உனக்கு வழி செய்யறேன்! போலீஸ் உனக்கு பக்கத் துணையா இருக்கும்.

ரகு : வேண்டாம் சார். எனக்குப் பயமாயிருக்கு!

குணா: இன்ஸ்பெக்டர் சார், ரகு ரொம்பப் பயப்படறான். விட்டுடுங்க சார்! வாங்க போகலாம்!

காட்சி - 4


இடம் : துணிக்கடை

கடைக்காரர் : தம்பி! துணி பண்டிலை ஜாக்கிரதையா எடுத்துக்கிட்டுப்போ! ரெண்டு நாள் முன்னாடிதான் குணாங்கிற பையனோட புதுச்சட்டையை ஒரு பையன் பிடுங்கிக்கிட்டு ஓடிட்டான்.

ரகு : தெரியுமுங்க. அந்த 'குணா' என் சிநேகிதன்தான், வரேன்.

கடைக்காரர் : ஐய்யய்யோ! தம்பி படிக்கட்டுலே வழுக்கி விழுந்துட்டானே... யாரோ படிக்கட்டுலே தண்ணியைக் கொட்டியிருக்காங்க. ஏய்! ஏய்! யாருடா அது, பையை எடுத்துக்கிட்டு ஓடறது... ஐயா அவனைப் பிடிங்க... அந்தப் பையன் திருடிக்கிட்டு ஓடறான்... தம்பி மெள்ள எழுந்திரு. அடிகிடி பட்டுச்சா சொல்லு.

ரகு : அதெல்லாம் ஒண்ணுமில்லை சார். விழுந்த வேகத்திலே புதுச்சட்டை வச்சிருந்த பை கை நழுவி விழுந்துட்டுது. யாரோ பையன் எடுத்துக்கிட்டு ஓடிட்



"இரும்புச்சத்து உன் உடம்புல குறைவா இருக்கு."

"அதிகமா இருந்தா என் உடம்புல துரு ஏறிடாதா டாக்டர்?"

— நெற்குப்பை கி. மனோகரன்

டான்.

கடை : கவலைப்படாதே... உன்னை மாதிரி ஒரு பையன் அவனைத் துரத்திக்கிட்டு ஓடியிருக்கான். நிச்சயம் பிடிச்சுடுவான்னு நினைக்கிறேன்.

ஒருவர் : நினைக்கறது என்ன சார். அதோ அங்கே பாருங்க. அந்தப் பய வகையா மாட்டிக்கிட்டான்.

கடை : அட, அது நம்ம குணா... குணா!

ரகு : குணாவா?

கடை : குணா. நீயா இவனைத் துரத்திக்கிட்டு ஓடினது!

குணா : ஆமாங்க. ரகு, நீ படிக்கட்டுலே தடுமாறி விழுந்ததும் இந்தப் பையன் உன் சட்டையைத் தூக்கிக்கிட்டு ஓடினதைப் பார்த்தேன். உடனே யோசிக்காம துரத்திப் பிடிச்சுட்டேன். பக்கத்துலே இருந்த ஜனங்களும் உதவி செஞ்சாங்க!

ஒருவர் : குணாத் தம்பி! நல்ல துணிச்சல்காரப் பையன்பா நீ... ஏன், எல்லாரும் பாத்துக்கிட்டு சும்மா நின்னுக்கிட்டிருக்கீங்க? ஆளுக்கு ரெண்டு 'தர்ம அடி' போடுங்க!

குணா : சார் நில்லுங்க. இவனை போலீஸ் ஸ்டேஷன்லே ஒப்படைச்சுடறோம், நீங்க போங்க! ரகு! இந்தா உன் புதுச்சட்டை!

ரகு : குணா என்னை மன்னிச்சுடு! உன் துணிச்சலை நான் பாராட்டறேன். ரெண்டு நாள் முன்னால உன் சட்டையைப் பிடுங்கிக்கிட்டு ஓடின அந்தப் பையனை நான் பார்த்தும்கூட, அவனைத் துரத்தாம விட்டுட்டேன். போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து அடையாளம் காட்டவும் மறுத்துட்டேன். ஆனா நீயோ கொஞ்சம் கூட யோசிக்காம இவனைத் துரத்திப் பிடிச்சுட்டே... குணா! இந்தப் பொங்கலுக்கு நான் வாங்கின சட்டையைத் திருட்டுப் போகாம தடுத்து எனக்குத் திருப்பித் தந்துட்டே! அது போல நானும் உன் புதுச்சட்டை, உனக்குக் கிடைக்கணும்னு விரும்பறேன்! நானும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து அந்தப் பையனையும் அடையாளம் காட்டறேன். வா!

குணா : மகிழ்ச்சி ரகு! ஆனா என் சட்டையைத் திருடிக்கிட்டு ஓடின பையன் வேற யாருமில்லை! இந்தப் பையனோட தம்பிதான்! அதை இவனே என் கிட்டே சொல்லிட்டான்! இந்த ரெண்டு தம்பிகளும் தங்களுக்குப் போட்டுக்க சட்டையில் லேங்கற காரணத்துக்காகத்தான் சட்டைகளைத் திருடிக்கிட்டு ஓடியிருக்காங்க! அதுக்காக இவன் வருந்தறான்! இவங்க தங்கள் தவறை உணர்ந்து நிச்சயம் திருந்திடுவாங்க! அதனால இவங்களுக்கு எந்தத் தண்டனையும் கொடுக்காம, எச்சரிச்சு மன்னிச்சு அனுப்பிச்சுடச் சொல்லலாம், வா!

அப்பா : (பின்புறமாக வந்தபடி) குணா! நில்லு!

குணா : அப்பா... நீங்களா?

அப்பா : குணா, நீங்க பேசிக்கிட்டிருந்ததை நானும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். ஆனா தவறு செய்தவங்க தண்டனையை அனுபவிச்சே ஆகணும்!

குணா : அப்பா. இவங்க பாவம்பா!

அப்பா : அதெல்லாம் கிடையாது. நானே இவங்களுக்கு தண்டனை தரப் போறேன்.

குணா : என்ன தண்டனை?

அப்பா : இந்த ரெண்டு தம்பிகளுக்கும் நானே பொங்கலுக்காகப் புதுச்சட்டை வாங்கித் தரப் போறேன். பொங்கலன்னிக்கு நம்மளோட இவங்களும் விருந்து சாப்பிடப் போறாங்க. என்ன தம்பி இந்தத் தண்டனை உனக்குப் பிடிச்சிருக்கா?

திருடியவன் : சார்! இது தண்டனை இல்லை. பொங்கல் பரிசு. நீங்க எல்லோரும் என்னை மன்னிச்சுடுங்க! இனிமே நானும் என் தம்பியும் எதுக்காகவும் திருடமாட்டோம்!

உலகிலேயே பெரிய மரங்கள்!

கலிபோர்னியாவில் உள்ள சியெரா நெவாடா என்ற மலைகளில் உலகிலேயே பெரிய மரங்கள் காணப்படுகின்றன. இம்மரங்களுக்கு பெரும் சிக்வயா (Giant Sequoia) என்று பெயர். இவை முந்நூறு அடி உயரம் வரை வளர்கின்றன.

பெரும் சிக்வயா மரத்தின் பட்டை சிவப்பு நிறமாக இருக்கும். இலைகள் சிறியவை. விதை முற்றுவதற்கு இரண்டாண்டுகள் ஆகும். முற்றின விதை 12 ஆண்டுகள் வரை மரத்திலேயே பச்சையாக இருக்கும். மரம் மிகவும் உறுதியானது. பட்டைகள் பிரித்தெடுக்க முடியாதபடி கடினமாக இருக்கும்.


உலகிலேயே நீண்ட காலம் உயிர் வாழக்கூடிய உயிரினம் இம்மரங்கள்தான்! நான்காயிரம் வருடங்கள் வயதுடைய மரங்கள் கூட இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர்.



சிக்வயா மரங்களை பூச்சியோ, பூஞ்சைகளோ எளிதில் தாக்க முடியாது. இம்மரத்தில் இருந்து டானின் என்னும் துவர்ப்பு பொருள் சுரப்பதால் பூச்சி, பூஞ்சைகளிடமிருந்து காத்துக் கொள்கின்றது.

இந்த அரிய மரங்களை பாதுகாப்பதற்காக சிக்வயா தேசிய பூங்கா 1890-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இப்பூங்காவில் தற்போது 272 அடி உயரமும், அடி மரம் 101 அடி பருமனுமுள்ள பெரும் சிக்வயா மரங்கள் காணப்படுகின்றன. இவற்றின் எடை சுமார் ஆறாயிரம் டன்கள்.

இப்பெரும் சிக்வயா மரத்தை நடுவில் குடைந்து சுரங்கம் போல் வழி ஏற்படுத்தினால் பெரிய காரே செல்லலாம் என்றால் அதன் உருவத்தை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்களேன்!



ரஹீமைக் கண்டுபிடித்த ராமன்

ராமனும், ரஹீமும் பத்தாம் வகுப்பு படிப்பவர்கள். அவர்கள் படிக்கும் பள்ளி வெகு தூரத்தில் இருப்பதால், காலையிலேயே எழுந்து, தயாராகி சைக்கிளில் சென்று விடுவார்கள். ரஹீம் செல்வந்தரின் மகன் என்றாலும் கர்வ மற்றவன். ராமனும் ரஹீமுடைய குணம் ஒத்தவன். ஆதலால், இருவரும் இணை பிரியா நண்பர்கள் ஆயினர்.

ஒருநாள், இருவரும் பள்ளியிலிருந்து சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்பொழுது, திடீரென்று ஒரு கார் அவர்களை தள்ளிவிடும் வேகத்தில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு முரடன் இறங்கி வந்து, ரஹீமை அலேக்காகத் தூக்கிச் சென்று காருக்குள் போட்டான். தடுக்க வந்த ராமனை முரட்டுத்தனமாகத் தள்ளிவிட்டு காரில் பறந்து விட்டான். தள்ளப்பட்ட ராமன் சுதாரித்து எழுந்து காரின் அடையாளம் குறிக்க முற்பட்டான். அதற்குள் கார் பறந்து விட்டது. அவனின் மனம் மிகவும் வருத்தமடைந்தது. நண்பனை மீட்டு விட வேண்டும்! என்ற உத்வேகத்துடன் தன் ஊருக்குச் சென்று, ரஹீமின் பெற்றோரிடம் விஷயத்தைக் கூறினான். அனைவரும் அதிர்ச்சியுற்றனர்.

பின்னர், போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்தனர். அவர் ரஹீமைக் கண்டுபிடிக்கும் வேலையில் இறங்கினார். ராமனும் அவருக்கு உதவி செய்ய உறுதியளித்தான். அப்பொழுது, அவனது 'புத்திசாலி' மூளையில் ஒரு வழி தோன்றியது அதனை, இன்ஸ்பெக்டரிடம் கூறினான். அவர் அதனை ஆமோதித்து அவனுடன், ரஹீம் கடத்தப்பட்ட இடத்திற்கு ஜீப்பில் சென்றார். அவ்விடத்திலிருந்து, இருவரும் கார் சென்ற திசையில் சென்றனர்.

"சார் மெடிக்கல் ஷாப்கிட்ட யாராவது பார்த்தாங்களான்னு விசாரிச்சுப் பார்க்கலாம்" - ராமன்.

கடையிலோ கூட்டம் அதிகமிருந்தது. ராமனும் இன்ஸ்பெக்டரும் காத்திருந்தனர். அப்போது ஒரு சிறுவன் பத்து ரூபாய் நோட்டை நீட்டி பிளாஸ்திரி கேட்டுக் கொண்டிருந்தான்.

ராமனுக்கு அந்த ரூபாய் நோட்டில் ஏதோ எழுதியிருப்பது தெரிந்தது. பையனை அருகில் அழைத்தான் ராமன். "பிளாஸ்திரி ரெண்டு ரூபாய்தான். சில்லறை தர மாட்டாங்க. அதை என்கிட்டே கொடு. உனக்குச் சில்லறை தரேன்" என்று வாங்கினான். சில்லறையைத் தேடிப் பிடித்துக் கொடுத்தான்.

அந்தப் பையன் பிளாஸ்திரி வாங்கச் சென்றான். ராமன் அந்த ரூபாய் நோட்டில் எழுதியிருந்ததை கஷ்டப்பட்டு படித்தான். மாந்தோப்பு பங்களாவில் இருக்கிறேன். காப்பாற்றவும் என்று எழுதி 'ர' என்று கையெழுத்து இடப்பட்டிருந்தது.

"சார்! நான் ரஹீம் இருக்கிற இடத்தைக் கண்டுபிடிச்சுட்டேன்! ரஹீம் புத்திசாலிதான்! செய்தியை தெரிவிச்சுட்டான் பார்த்தீங்களா? அந்தப் பையனையும் ஏத்திக்குங்க!"

பையன் மாந்தோப்பு பங்களாவுக்கு வழி சொல்ல ஜீப் பறந்தது.

பத்து நிமிடத்திற்குப் பின், அந்தப் பங்களாவை அடைந்தனர். அந்தச் சிறுவனை முதலில் சென்று கதவைத் தட்டச் செய்தனர். அவன் கதவைத் தட்டியவுடன், ஒரு முரடன் திறந்து, "ஏண்டா! இவ்வளவு நேரம்?" எனக் கேட்டான். உடனே, இன்ஸ்பெக்டர் திடுமென நுழைந்து அம்முரடனை கையும் களவுமாகப் பிடித்தார். ரஹீம் விடுவிக்கப்பட்டான். இன்ஸ்பெக்டர், ராமன், ரஹீமுடைய புத்திசாலித்தனத்தைப் பாராட்டினார். பின்னர் ரஹீமிடம், "அந்த முரடனுக்குத் தெரியாமல், எப்படி நீ பத்து ரூபாய் நோட்டில் 'மேட்டரை' எழுதி அனுப்ப முடிஞ்சது?" எனக் கேட்டார் ஆர்வத்துடன்.

"அங்கே போய் இறங்கினவுடனேயே, அவன் என் கட்டுகளை அவிழ்த்து, பங்களாவில் அடைத்தான். சிறிது நேரத்தில் படுத்துத் தூங்கி விட்டான். அப்போ, எனக்கு ஒரு 'ஐடியா' கிடைச்சது. அதன்படி அப்பா கொடுத்த பத்து ரூபாய்ல, அவன் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதற்காக, பென்சிலால் எழுதினேன். அவனது சட்டைப் பாக்கெட்ல அவனுக்குத் தெரியாமல் மேலாக வைத்தேன். என்னைத் தூக்கிச் செல்லும்போது, அவன் முரட்டுக் கை பட்டு, என் உதடு கிழிப்பட்டிருந்தது. அதனால, அவன் தூங்கி விழித்ததும் என் காயத்துக்கு பிளாஸ்திரி கேட்டேன். அவனும் இரக்கப்பட்டு ஒரு பையனிடம், பிளாஸ்திரி வாங்கி வரச் சொல்லி, தன் பாக்கெட்டிலிருந்து, நான் வைத்த பத்து ரூபாயை எடுத்துத் தந்தான். அதிர்ஷ்ட வசமா, அது ராமனுக்குக் கிடைச்சு, என்னைக் காப்பாத்த உதவியது. உங்க எல்லோருக்கும் ரொம்ப நன்றி" என்றான்.

உடனே, "முதல்ல நாம் அந்தப் பையனுக்குத்தான் நன்றி சொல்லணும், ஏன்னா, அவன் மூலமாகத்தான் எங்களுக்குப் பத்து ரூபாய் கிடைச்சது!" என்றான் ராமன்.

இருவரின் நட்பையும் மனதார பாராட்டினார் இன்ஸ்பெக்டர்.

— எம்.எஸ். உம்மு அம்மாரா,
பத்தாம் வகுப்பு,
இமாம் கஸ்ஸாலி பள்ளி,
லால்பேட்டை.






பாவம் வரதன்!



வரதன் ஒரு அப்பாவி. ஒருநாள் காக்கா பிடிக்கப் போனான். போகும்போது. "காக்கா பிடிக்கப் போறேன், காக்கா பிடிக்கப் போறேன்னு" சொல்லிக் கொண்டே சென்றான். வரதன் சொல்வதைக் கேட்ட அவ்வூர் ரவுடி ஆத்திரமடைந்தான். ஏனென்றால் அவன் பெயர் கா. காத்தவராயன். அதைச் சுருக்கி காகா என்றே கூப்பிடுவார்கள். எனவே வரதனை அழைத்து. "என்னையா

சேமிப்பு



குமரனும், கண்ணனும் நண்பர்கள். குமரன் அம்மா, அப்பா கொடுக்கும் காசை வாங்கி சஞ்சயிகா சிறுசேமிப்பில் போட்டு வந்தான். ஆனால் கண்ணனோ தன் அப்பா கஷ்டப்பட்டு சம்பாதித்து சேர்த்து வைத்து இருக்கும் காசை மிட்டாய் வாங்கித் தின்றே செலவழித்தான்.

திடீரென்று கண்ணனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போயிற்று. கண்ணனின் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. கையில் அவர்களிடம் காசும் இல்லை. கண்ணனிடம், "உன் சிறுசேமிப்பில் இருக்கும் பணத்தை எடுக்கலாமா?" என்றார். கண்ணன் திணறினான். என்னவென்று கேட்டார் அப்பா. "அப்பா நீங்கள் கொடுக்கும் பணத்தை நான் சிறுசேமிப்புத் திட்டத்தில் போடாமல் செலவழித்து விட்டேன்" என்று கூறினான்.

திடுக்கிட்டார் கண்ணனின் அப்பா. விஷயத்தை அறிந்த குமரன் கண்ணன் விட்டிற்கு வந்தான்.

"இந்தாங்க மாமா என் பணத்தை எடுத்துக்கிட்டு இவனை மருத்துவமனைக்குக் கூட்டிட்டுப் போங்க" என்று அவசரப்படுத்தினான். கண்ணனின் அப்பா தயங்கினார். குமரனின் வற்புறுத்தலால் பணத்தை எடுத்துக் கொண்



போலீஸ்ல பிடிச்சுக் கொடுக்கப் போறே?'' என்று அடித்தான். வலி தாங்காத வரதன், ''பிடிக்கக் கூடாது, பிடிக்கக் கூடாது'' என்று கத்திக் கொண்டே குளக்கரைக்கு வந்தான். குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவன், ''ஏன்டா, மீன் பிடிக்கக் கூடாது? இது என்ன உன் வீட்டுக் குளமா, நானே காலையிலேயிருந்து மீன் கிடைக்கலையேன்னு கவலைல இருக்கேன்'' என்று கூறி அடித்தான். உடனே வரதன், ''நல்லா பிடிக்கணும், நல்லா பிடிக்கணும்'' என்று அழுது கொண்டே சென்றான். அப்போது வயலில் வைக்கோல் இருந்த இடத்தில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. வயலுக்குச் சொந்தக்காரன் தீயை அணைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். வரதனின் குரலைக் கேட்ட அவன் கடுங்கோபம் கொண்டு வரதனை நோக்கி ஓடி வந்தான். இனியும் அடி வாங்க சக்தி இல்லாத வரதன் பிடித்தான் ஓட்டம்.

– சி. முஹம்மது ஷரீப்,
அதிராம்பட்டினம், தஞ்சை மாவட்டம்.

கண்ணனை அழைத்துச் சென்றார்.

கண்ணனை பரிசோதித்த மருத்துவர், ''உடனே அழைத்து வந்ததினால் ஆபத்தில்லை'' என்று கூறினார். இரண்டு நாட்களில் கண்ணன் குணமானான். கண்ணனைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தான் குமரன். ''கண்ணா உன்னைக் காப்பாற்றியது குமரனும், குமரனின் சிறுசேமிப்பும்தான்'' என்று கூறி குமரனின் கைகளை பிடித்துக் கொண்டார் கண்ணனின் அப்பா.

''அப்பா சிறுசேமிப்போட அவசியத்தையும், குமரனின் உண்மையான நட்பையும் இந்த நோய் எனக்கு உணர்த்திவிட்டது'' என்று உண்மையான வருத்தத்துடன் கூறினான் கண்ணன்.


கண்ணனுக்கு நோய் குணமானதுடன், பொறுப்பும் வந்தது குறித்து அவனின் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மகிழ்ச்சி பொங்கியது.

– என். ராஜா ராமச்சந்திரன்,
காளப்பநாயக்கன்பட்டி அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம்.

சுவையாக இல்லையே!

ஒருநாள் அரசர் தன் அமைச்சரோடு நகர்வலம் வந்து கொண்டிருந்தார். நகரின் முச்சந்தியில் நிறைய பழங்களோடு ஒரு மாமரம் இருந்தது. அரசர் தன் அமைச்சரிடம், ''அமைச்சரே அந்த மாமரத்தில் எத்தனை பழங்கள் இருக்கிறது பாருங்கள்?'' என்று காண்பித்தார். அதற்கு அமைச்சர், ''எத்தனை பழங்கள் இருந்து என்ன பயன் மன்னா. அதில் உள்ள பழங்கள் சுவையாக இல்லையே!'' என்றார். மன்னரோ ஆச்சரியத்தோடு, ''பழங்களைச் சாப்பிடாமலேயே சுவையாக இருக்காது என்கிறீர்களே அது எப்படி?'' என்று கேட்டார். அதற்கு ''பழங்கள் சுவையாக இருந்திருந்தால் மக்கள் நடமாட்டம் மிகுந்த இந்த இடத்தில் இத்தனை பழங்கள் மரத்தில் இருக்காது மன்னா!'' என்றார் அமைச்சர். அமைச்சரின் புத்திசாலித்தனத்தை எண்ணி வியந்தார் மன்னர்.

– சக்தி. சரவணன்,
மோகனூர்.



வீரபுரியை ஆண்ட வீரசேனன் சரியான முட்டாள் ராஜா. தேவையில்லாமல் விதவிதமான சட்டங்களை இயற்றுவான். அவைகளை கடைபிடிக்காவிடில் கடுமையான தண்டனைகளை விதிப்பான்.

தண்டனைகளுக்கு பயந்து வேண்டா வெறுப்பாக மக்கள் மன்னன் இட்ட கட்டளைகளுக்கெல்லாம் அடிபணிந்து வந்தனர். அன்றும் அப்படித்தான்.

"இனி ஒரு நாளைக்கு ஒரே ஒரு தடவைதான் பேசலாம். மீறி பேசினால் கடுமையான தண்டனை வழங்கப்படும்" என்று புதிய சட்டம் ஒன்றை அறிவித்தான்.

நடைமுறையில் சாத்தியமாகக்கூடிய சட்டமா என்ன? எத்தனையோ சந்தர்ப்பங்களில் பேச வேண்டிய தேவைகள் எழத்தானே செய்கின்றன!

நாடே கலகலத்துப் போயிருந்தது.

மந்திரி மகாசேனன் மிகவும் வேதனைப்பட்டார்.

இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று நினைத்தார்.



ஓர் எருமை மாட்டை அழைத்துக் கொண்டு யாருக்கும் தெரியாமல் அந்தப்புரத்தில் நுழைந்தார். எருமை மாட்டை வாசலில் நிற்க வைத்துவிட்டு உள்ளே நுழைந்து மகாராணியிடம், "மகாராணி சௌக்கியமா?" என்றார்.

"சௌக்கியம் அமைச்சரே" என்ற ராணி பதறிப் போனார்.

"ஐயையோ... நான் இன்று காலையில் ஒருமுறை அரசருடன் பேசி விட்டேன். இதைப் பார்த்தால் தண்டனை நிச்சயம்" என்று கலங்கினார்.

"இல்லை மகாராணி, பார்த்து நீண்ட நாட்களாகி விட்டதால் குசலம் விசாரிக்க வந்தேன்!"

"நல்லவேளை... நம்மை யாரும் பார்க்கவில்லை... உடனடியாகப் போய் விடுங்கள்!"

வாசல் பக்கம் திரும்பிய அமைச்சர் பதறினார்.

"மகாராணி, நம்மை அந்த எருமை மாடு பார்த்து விட்டது. அது போய் எல்லோரிடமும் சொல்லி விட்டால்?"

பதட்டத்தில் மகாராணிக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஐயையோ என்ன செய்வது?"

"அந்த எருமையிடம் போய் யாரிடமும் சொல்லாதே... என்று கேட்டுக் கொள்ளுங்கள்!"

மகாராணி, மாடு அருகில் செல்லவும் ஏற்கனவே ஏற்பாடு செய்தபடி வெடி சத்தம் முழங்க, எருமை மாடு எழுந்து ஓடத் தொடங்கியது.

மந்திரி கத்தினார்: "பின்னாடியே

கே. சோமசேகர்

சொல்லாதே எருமை மாடே..!

ஓடுங்கள்... எப்படியாவது அதைப் பிடித்து விஷயத்தைச் சொல்லி விடுங்கள்!''

மகாராணி எருமையின் பின்னாடியே ஓட... அது தெருவில் இறங்கி ஓட ஆரம்பித்தது.

மகாராணி எருமையின் பின் ஓடு



வதைக் கண்ட தளபதிக்கோ குழப்பம்.. மகாராணியிடம் பேசவும் முடியாது. 'என்னவோ... ஏதோ?' - என்று தளபதியும் மகாராணியின் பின்னால் ஓட ஆரம்பித்தார்.

இதைக் கண்ட படை வீரர்கள் தளபதியின் பின் ஓடினர்.

கூட்டத்தைக் கண்ட பயங்கர பீதியில் எருமை மாடு இன்னும் வேகமாய் ஓட, ஊர் மக்களும் பின்னாடியே ஓட ஆரம்பித்தனர்.

விஷயம் என்னவென்று கேட்க எல்லோருக்கும் பயம்.

நன்றாக ஆட்டம் காட்டி ஓடிய எருமை மாடு களைத்துப் போய் ஓரிடத்தில் படுத்துக் கொண்டது.

அதன் அருகில் அமர்ந்துகொண்டு, ''சொல்லாதே எருமை மாடே, சொல்லாதே எருமை மாடே!'' என்று மகாராணி அழ ஆரம்பித்தார்.

ஊரே சுற்றி நின்றிருந்தது.

விஷயம் அறிந்த மன்னன் ஓடி வந்தான்.

மகாராணியை கட்டாயப் படுத்தி கேட்க, விஷயத்தை ரகசியமாகச் சொன்னாள்.

'திருடனுக்கு தேள் கொட்டியது' போல் இருந்தது, மன்னனுக்கு.

விஷயம் வெளியே தெரிந்தால் பயங்கர அவமானத்தோடு ராணிக்கும் கடுமையான தண்டனை அளிக்க வேண்டும்.

தன் முட்டாள்தனமான சட்டத்தை எண்ணி நொந்தான். உடனடியாக தன் சட்டத்தை நீக்கி விட்டான்.

ராணி ஏன் எருமை மாடு பின்னே ஓடினாள் என்று இன்றுவரை வீரபுரி மக்களுக்குத் தெரியவேயில்லை.



டெலிபோன் மணி!

எங்கள் வீட்டில் டெலிபோன் இருக்கிறது. பக்கத்து வீட்டு மாமாவிற்கு அடிக்கடி யாராவது போன் செய்வார்கள். ஒருநாள் யாரோ போன் செய்வார்கள் என்று எங்கள் வீட்டில் காத்திருந்தார். போனும் டீ.வி.யும் அருகருகே இருந்தது. டீ.வி.யில் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது படத்தில் டெலிபோன் மணி அடித்தது. காத்திருந்த பக்கத்து வீட்டு மாமா ஓடிச் சென்று போனை எடுத்துப் பேசினார். எங்களுக்கோ சிரிப்பை அடக்க முடியலை.




அதன் பிறகு சுதாரித்துக் கொண்டவர் சிரித்தபடியே வந்து அமர்ந்தார்.

தாரமங்கலம், ஆர். பாலமுரளி.

கண்ணாடி பார்த்தால்...

நவீனுக்கு இரண்டு வயதாகிறது. அடிக்கடி அடம் பிடித்து அழுவான். அவன் கேட்டதைத் தரும் வரை அழுகையை நிறுத்த மாட்டான். இவனை எப்படி சமாளிப்பது என்று யோசித்தேன்.




ஒருநாள் அவன் அழும்போது, அவனை தூக்கி கண்ணாடியில் காட்டினேன். அழும்போது அஷ்டகோணலாகும் முகத்தை கண்ணாடியில் பார்த்ததும் திடுக்கிட்டு அழுகையை நிறுத்தினான். இதை இன்றுவரை பயன்படுத்தி வருகிறேன்.

அந்தணப்பேட்டை,

அண்ணா அன்பழகன்.

கூடப் பிறந்தவனா?

நானும் அண்ணனும் கடைக்குச் சென்றிருந்தோம். எதிரே என் நண்பன் வந்தான். அவனுக்கு அண்ணனை அறிமுகம் செய்து வைத்தேன். அவன்



எங்கள் ஊரில் நடந்தது...


எங்கள் ஊரில் நடந்தது...

அண்ணனைக் காட்டி "உன் கூடப் பிறந்த அண்ணனா?" என்று கேட்டான். உடனே என் அண்ணன் "இல்லை, நான் பிறந்து ரெண்டு வருஷம் கழிச்சு என் தம்பி பிறந் தான்" என்றானே பார்க்கலாம்!

வேலநத்தம், பி. ராஜா.

அடைக்கலசாமி!

எங்க பக்கத்து வீட்டுக்காரரைத் தேடி வங்கியிலிருந்து அதிகாரி வந்திருந்தார். பக்கத்து வீட்டுக்காரரிடம் "உன் பேர் என்ன?" என்று கேட்டார். அவரும் "அடைக்கலசாமி" என்று கூறினார். "சரிப்பா. வங்கியில வாங்கின கடனை நீ அடைச்சிட்டியா?" என்று அதிகாரி கேட்



டார். உடனே அவர், "அடைக்கலசாமி" என்று சொன்னதும் அருகிலிருந்த எங் களால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

கீழ்மலை கிராமம்,
ரா. கோதண்டராமன்.

பூட்டிட்டார்!


பக்கத்து வீட்டுப் பையனிடம் "இந்த கடிதத்தை தபால் பெட்டியில் போட்டு விடு" என்றேன் நான். "அண்ணே நான்



தபால் பெட்டியை பார்த்திருக்கேனே தவிர, எப்படி கடிதத்தை போடுவதுன்னு தெரியாதே!" என்றான் வருத்தத்துடன். நான் அவனுக்கு விளக்கிச் சொன்ன பிறகு கடிதத்தை வாங்கிக் கொண்டு கிளம்பி னான். சிறிது நேரம் கழித்து கடிதத்து டனே திரும்பினான். காரணம் கேட்ட போது "நான் போடப் போகும் போது தபால்காரர் பெட்டியில் இருந்த கடிதத் தையெல்லாம் எடுத்துக்கிட்டு பெட்டியை பூட்டிட்டார். அதனால தான் கொண்டு வந்துட்டேன்" என்றான். பிறகு அவ னையும் அழைத்துப் போய் எப்படி போடு வது என்று சொல்லிக் கொடுத்தேன்.

நீர்விளங்குளம், ப.காளிதாசன்.






ஆயிரம் காலத்துப் பயிர்

வீட்டில் அனைவரும் கல்யாணத்திற்கு சென்றிருந்தோம். மண்டபத்திற்கு வெளியே ஆடு, மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. இதைப்பார்த்த கல்யாண வீட்டார் ஒருவர் ஆடு, மாடுகளை குச்சியால் அடித்து விரட்டினார். "எதுக்காக இப்படி விரட்டறாங்க" என்று நான் கேட்டவுடன் என் அண்ணன் சொன்னான்: "கல்யாணங்கிறது ஆயிரங்காலத்துப் பயிர். ஆடு, மாடு மேய்ந்து விடக் கூடாது என்பதற்காக விரட்டியிருப்பாங்க!" நாங்கள் வயிறு வலிக்க சிரித்தோம்.

முழையூர், ஆர். உதயகுமார்.

ஓட்டத் தெரியும்!

என் மாமா பையன் விடுமுறைக்கு வீட்டிற்கு வந்திருந்தான். அவனுக்கு ஸ்கூட்டர் ஓட்டத் தெரியாது. என் அம்மாவிடம் தனக்கு நன்றாக ஸ்கூட்டர் ஓட்டத் தெரியும் என்று சொல்லி விட்டு எடுத்துக் கொண்டு சென்றான். கிளம்பும்போது "உனக்குக் காயம் படுற




மாதிரி ஓட்டாதே" என்றார் அம்மா. சிறிது நேரத்தில் திரும்பியவன் எங்கேயோ இடித்து லைட் உடைந்து போய்க் கொண்டு வந்தான். "ஏண்டா இப்படி செய்தே" என்று அம்மா கேட்டதற்கு "நீங்க சொன்னபடி எனக்கு ஒரு காயமும் இல்லை அத்தை, வண்டி பத்திரம்னு சொல்லியிருந்தா, பத்திரமாகக் கொண்டு வந்திருப்பேனே!" என்றான்.

சென்னை, எஸ். கணேஷ்

ஒன்னரை வருமா?

குமாரபாளையம் செல்வதற்காக பஸ் ஸ்டாப்பிங்கில் நின்று கொண்டிருந்தேன். நீண்ட நேரமாகியும் பஸ் வராததால், அருகில் இருந்தவரிடம் "சார் ஒன்னரை பஸ் வருமா?" (ஒன்றரை மணி பஸ்ஸை



அப்படி அழைப்பது எங்கள் ஊர் வழக்கம்) என்று கேட்டேன். உடனே "ஒன்னரை பஸ்ஸெல்லாம் வராதுங்க! முழுசா ஒரு பஸ்தான் வரும்" என்றார் அவர்!

குருசாமிபாளையம்,
ஜி.எஸ். செல்வராஜ்.

செல்லமாக...

என் தம்பி பாட்டியிடம் சென்று "என் பேர் லிங்கராஜா, அப்பா என்னை செல்லமாக ராஜான்னு கூப்பிடறாங்க. உங்க அப்பா உங்களை எப்படி கூப்பிடுவாங்க?" என்றான். அதற்கு பாட்டி



''செல்லம்மாத்தான் கூப்பிடுவாங்க'' என்றார் பதிலுக்கு. "சரி செல்லப் பெயரைத்தான் சொல்லேன்." "இங்க பாருடா என் பேரே செல்லம்மாதான்னு சொல்றேன். மறுபடியும் அதையே கேட்டிட்டு இருக்கியே" என்றார் கோபமாக. நாங்கள் அனைவரும் சிரித்தோம்.

தாசகுப்பம், சி.ஜோசப்.


நான் ஒரு மக்கு?

நாங்கள் புதிதாக ரோஜாச் செடி வாங்கியிருந்தோம். நானும் என் தங்கையும் போட்டி போட்டுக் கொண்டு தண்ணீர் ஊற்றுவது வழக்கம். ஒருநாள் அம்மாவும் தங்கையும் கடைக்குச் சென்றிருந்தார்கள். அவர்கள் வருவதற்குள் வேகமாக தண்ணீர் ஊற்றினேன். ''அம்மா இன்னிக்கு செடிக்கு நான் ஒரு மக்கு தண்ணீர் ஊற்றினேன்'' என்றேன் பெருமையாக. என் தங்கை "அண்ணா நீ ஒரு மக்குன்னு ஒத்துக்கிறியே, அதுவே போதும்" என்றாளே பார்க்கலாம்! அம்மாவுக்கு சிரிப்பும் எனக்குக் கோபமும் வந்தது.

நெய்யூர் தபால், எஸ்.செல்வி

மாமாவோட பள்ளியா?

என் மாமா பெயர் அரசு. அவருடைய சைக்கிள், மோட்டார் பைக், கடிகாரம், நாற்காலி... என எல்லா பொருள்களிலும் 'அரசு' என்று எழுதியிருப்பார். ஒரு நாள் நானும் குட்டித் தம்பியும் கடைக்குச் செல்லும்போது மேல்நிலைப்




பள்ளியைக் காட்டி "அக்கா இந்தப் பள்ளியும் நம்ம மாமாவோடது தானே" என்றான். முதலில் எனக்குப் புரியவில்லை. அரசு என்பதை அவன் சுட்டிக்காட்டியதும் தான் அரசு உயர்நிலைப் பள்ளியை மாமாவின் பள்ளி என அவன் புரிந்து கொண்டதை அறிந்தேன். அவனுக்கு விளக்கிச் சொல்லிவிட்டு, வீட்டிற்கு வந்து செய்தியைப் பரப்பினேன். எல்லோருக்கும் ஒரே சிரிப்பு. எங்காவது பள்ளியைப் பார்த்தாலே எங்களுக்குச் சிரிப்பு வந்துவிடும்.

மிட்டூர், மு. தெய்வா.



குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. கடலில் பயணம் செய்ய உதவும் (4)

5. வெயிலில் நம்மை ஏமாற்றும் நீர் (3)

14. பனிப்பிரதேசங்களில் வாழும் மக்கள் (4)

வலமிருந்து இடம்

3. இப்பழத்தினுள் மினகு போன்ற விதையிருக்கும் (4)

6. குரங்கின் மறுபெயர். இப் பெயரில் வாகனமும் உண்டு (3)

8. விலங்குகளின் அரசன் (4)

9. கொடியில் காய்க்கும் பழம் (4)

11. இப் போட்டியில் வெற்றி பெற குரல்வளம் தேவை (3)

12. நம் நாட்டில் விளையும் பயிர்களில் ஒன்று. இவை முத்து முத்தாக இருக்கும் (3)

16. நம் நாட்டிற்கு ஏற்ற ஆடை. இப்பெயரில் செடி இருக்கிறது (4)

மேலிருந்து கீழ்

1. நேரத்தைக் காட்டும். கால் இல்லாமல் சுவரில் நிற்கும் (5)

2. மிடுக்கு மீசை வைத்த கவி (3)

3. ரங்கூன் இந்த நாட்டில் உள்ளது (3)

7. உணவு உண்ணத் தூண்டும் உணர்வு (2)

13. நிலவுக்கு இன்னொரு பெயர் (2)

கீழிருந்து மேல்

4. நாயின் இந்த உறுப்பை நிமிர்த்த முடியாது (2)

10. கிழக்கு, மேற்கு என்பது இதைக் குறிக்கிறது (2).

14. இந்த எண்ணால், இதையேப் பெருக்கினால் விடை 64 (3)


15. அதிக அளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடு (3)

16. இடத்திற்கு ஏற்ப தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும் விலங்கு (5)

ந. ரமா, சென்னை — 78

விடை : 65ஆம் பக்கம்


பொங்கலோ பொங்கல்!
கதை : ஜானகி முத்துக்குமார்
படம் : சசி
இன்று பொங்கல் திருநாள். காடே மகிழ்ச்சியில் இருந்தது.
சிங்க ராஜாவும் ராணியும் புத்தாடை அணிந்து பொங்கல் வைக்கும் இடத்திற்கு வந்தனர்.
அமைச்சரே பொங்கல் தயாரா?
இன்னும் பத்து நிமிடத்தில் தயாராகி விடும் அரசே!
தலைமை சமையற்காரர் குரங்காரைக் கூப்பிடுங்கள்.
இதோ அவரே வந்துட்டார்.
நான் சாப்பிடும் பொங்கலில் நெய்யும், முந்திரிப் பருப்பும் அதிகமிருக்கட்டும்.
ஏற்கனவே ஸ்பெஷலாக நெய்யும் முந்திரியும் போட்டிருக்கேன அரசே!


பொங்கலில் நெய் விட வேண்டாம். நெய்யில் பொங்கலை விடுங்கள்!
உத்தரவு அரசே!
அரண்மனையில் -
ஆஹா பிரமாதம்! நான் சொன்னதை விட நிறைய நெய்யும், முந்திரியும் போட்டு அருமையாகச் செய்திருக்கிறார்.
நம் குரங்காரின் கை மணத்தை கேட்கவா வேண்டும்?
மதியம் சாப்பாடு எதுவும் வேண்டாம். பொங்கலே சாப்பிட்டுக் கொள்கிறேன்.
அப்படியே செய்கிறேன்.
மதியம் சாப்பிட்டதும் -
ஐயோ! வயிறு வலிக்குதே. என்ன செய்வது?
அரசே எனக்கும் வயிறு வலிக்கிறது!
யாரங்கே? மருத்துவரை அழைத்து வாருங்கள்.
மருத்துவர் மானார் வந்தார்
அரசே! இந்த மருந்து சக்தி வாய்ந்தது. உடனே குணமாகும்.



மருந்து சாப்பிட்டும் வலி குறையவே இல்லையே!
அரசே எனக்கும் வேறு வழி தெரியலையே!
அப்போது -
வணக்கம் அரசே!
முயலாரே நீங்களாவது வயிறு வலித் தீர வழி சொல்லுங்கள்.
அதைவிட முக்கியமான விஷயம்!
என்ன சீக்கிரம் சொல்லுங்கள்!
என் மனைவி சொல்கிறாள். உங்களுக்கும் ராணிக்கும் வயதாகிவிட்டதாம்.
எங்களுக் கொன்றும் வயதாகவில்லை.
அப்படியென்றால் நீங்கள் என்னையும், அரசியார் என் மனைவியையும் துரத்திப் பிடியுங்கள் பார்க்கலாம்.
பந்தயம் போட இதுதான் நேரமா?


இது உங்கள் வயதுக்கு இடப் பட்ட சவால். விடாதீர்கள் அரசே!
நீண்ட தூரம் ஓட முடியாது. பெரிய வட்டம் போடுங்கள்.
போட்டி துவங்கியது.
முயலாரும், அவர் மனைவியும் சிறிது நேரம் போக்குக் காட்டி ஓடினார்கள்.
முயலாரே வசமாக மாட்டிக் கொண்டீரா?
நானும் பிடித்து விட்டேன்.
என்னை வயிறு வலியிலும் ஓடவைத்து துன்புறுத்தியதற்கு தண்டனை அளிக்கிறேன பார்!
அரசே இப்போது உங்கள் வயிறு வலி குறைந்திருக்குமே!
ஆமாம். வலி இல்லையே!
எனக்கும்தான்!


இது நானும் அமைச்சர் கரடியாரும் போட்ட நாடகம்.
நாடகமா?
ஆமாம். தாங்கள் நெய், முந்திரி அளவுக்கதிகமாக சேர்க்கப் பட்ட உணவை அதிகமாக உண்டு, ஒரே இடத்தில் இருந்ததால்தான் வயிறு வலி வந்திருக்கிறது. உங்களை ஓட வைத்து வலி நீக்கவே இந்நாடகம்.
சபாஷ் முயலாரே! இந்த முத்துமாலையை வைத்துக் கொள்ளுங்கள்.
நன்றி அரசே!


கோகுலம் ஓவியக் கூடம்

சென்னையில் உள்ள சில பள்ளிகளில் கோகுலம் 'உலக சமாதானம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டியை நடத்தியது. அப்போட்டியில் பரிசு பெற்ற சில ஓவியங்கள்.



எஸ். மந்தாகினி,
ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
அசோக்நகர்.

இ. சங்கீதா,
பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
அசோக்நகர்.







ஜெ. குமரன்,
எட்டாம் வகுப்பு 'பி' பிரிவு
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
புதூர்.



கே. சித்ரா,
பதினோராம் வகுப்பு,
அரசினர்
உயர்நிலைப் பள்ளி,
அசோக்நகர்.



மேரி ஜாஸ்மின்,
ஒன்பதாம் வகுப்பு
'பி' பிரிவு,
ஸ்ரீ.ஆர்.கே.எம்
சாரதா வித்யாலயா
உயர்நிலைப் பள்ளி.



ஆர். ஜோதிராமலிங்கம்,
ஏழாம் வகுப்பு
'டி' பிரிவு,
அரசினர்
உயர்நிலைப் பள்ளி,
புதூர்.

வண்ணத்துப் பூச்சிகள்

ஒரு வாரமாக நல்ல மழை. மரம், செடிகள் பளிச்சென பசுமையாகக் காட்சியளித்தன. பானு நான்கு மாதங்களுக்கு முன்பு வைத்த பூச்செடிகள் எல்லாம் பூக்க ஆரம்பித்து விட்டன. ஒரு பூவின் மேல் வண்ணத்துப் பூச்சி வந்து அமர்ந்தது.

பானுவுக்கு அந்த மஞ்சள் வண்ணத்துப் பூச்சியைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மெதுவாக வண்ணத்துப் பூச்சி அருகில் சென்றாள். உடனே இறகை விரித்துக் கொண்டு சட்டென பறந்து போனது. அடுத்த சில நிமிடங்களில் கருப்பு நிறத்தில் சிவப்புப் புள்ளியுடைய பெரிய வண்ணத்துப் பூச்சி வந்து அமர்ந்தது. அதை நோக்கி மீண்டும் சென்றாள் பானு. அதுவும் பறந்து போனது. சோர்வடையாமல் அடுத்த வண்ணத்துப் பூச்சிக்காகக் காத்திருந்தாள். வண்ணத்துப் பூச்சிகளைப் பார்க்கவும், அதைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் அவளுக்கு ஆர்வம் அதிகமாக இருந்தது. பானுவுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் கூட ஆர்வம் இருக்கிறது தானே?

வண்ணத்துப் பூச்சி, கரப்பான், கொசு, வெட்டுக்கிளி போன்றவை பூச்சி இனத்தைச் சார்ந்தவை. இறகுள்ள பூச்சி இனங்களில் உலகெங்கும் 1,60,000 வகைகள் காணப்படுகின்றன. இதில் வண்ணத்துப் பூச்சி வகைகள் மட்டும் 25,000.


வண்ணத்துப் பூச்சிகள் கண்கவரும் இறகுகளைப் பெற்றுள்ளன. பெண் வண்ணத்துப் பூச்சிகளை விட ஆண் பூச்சிகள் அதிக அழகோடு காட்சியளிக்கின்றன.

பெண் வண்ணத்துப் பூச்சி முட்டையிடும் பருவத்தில் 100 முதல் 3,000 முட்டைகள் வரை இடும்.

பெரும்பாலும் வண்ணத்துப் பூச்சிகள் தோட்டங்களில் உள்ள தாவரங்களிலேயே முட்டையிடுகின்றன. முட்டையிடுவதற்கு முன், அது சாப்பிடக் கூடிய தாவரமா, நிறைய உணவு பெற முடியுமா, என்பதையெல்லாம் ஆராய்ந்த பிறகே முட்டையிடுகின்றன.

இலைகளின் அடிப்புறத்தில் பசை போன்ற பொருளோடு முட்டையிடும்.





அந்த முட்டை இலைகளில் ஒட்டிவிடும். ஒரு செடியில் நான்கு முட்டைகள் வரையே இடும். அளவுக்கதிகமாக முட்டையிட்டால் புழுக்கள் பொரிந்து வெளிவரும் போது போதிய உணவின்றி இறந்து போய்விடும்.

இவ்வாறு இலைகளில் இடப்பட்ட முட்டைகள் மூன்றிலிருந்து ஏழு நாள்களுக்குள் பொரிந்து வெளி வந்து விடுகின்றன.

முட்டையிலிருந்து வெளி வந்த புழு முதலில் தான் வெளி வந்த முட்டை ஓட்டினையே உணவாக உட்கொள்கிறது. இப்புழுவிற்கு லார்வா அல்லது கம்பளிப்புழு என்று பெயர். இந்தச் சின்னக் கம்பளிப் புழு இலைகளை சாப்பிடத் துவங்குகிறது. இப் பருவத்தில் இடைவிடாமல், சாப்பிடும் இயந்திரம் போல் இலை, தண்டு, காம்பு என எல்லாவற்றையும் சாப்பிடுவதால் செடிகளுக்கு அதிகத் தீங்கை விளைவிக்கின்றன.

ஏராளமான உணவை சாப்பிடுவதால் வேகமாக உருவம் மாறுகிறது. இந்த நிலையில் நான்கு அல்லது ஐந்து முறை தோலுரித்து, பல பரிணாமங்களை அடைகின்றது.

பின்பு கம்பளிப் புழு உணவு உண்பதை நிறுத்திவிடுகிறது. இதற்கு பியூபா அல்லது கூட்டுப்புழு என்று பெயர். முப்பது நிமிடங்களில் கூட்டுப் புழு தன்னைச் சுற்றி ஒருவித திரவத்தைச் சுரந்து கூட்டை உருவாக்குகிறது. இக்கூடு பட்டு நூல் போன்று காட்சியளிக்கும். உறுதியானது.

இந்தக் கூட்டிற்குள் அசையாமல், சாப்பிடாமல் தூங்கிக் கொண்டிருக்கும். கூட்டிற்குள் மேலும் பல மாற்றங்களை அடைகிறது. நான்கு வாரங்கள் கழித்து ஒரு நாள் சூரிய வெளிச்சத்தில் தன் கூட்டை உடைத்துக் கொண்டு முழு வண்ணத்துப்

அறிவியல் உண்மைகள்



◆ வண்ணத்துப் பூச்சி Lepidoptera என்னும் பூச்சி இனத்தைச் சார்ந்தவை.

◆ இவை உலகெங்கும் 25,000 வகைகளில் காணப்படுகின்றன.

◆ உடல் தலை, மார்பு, வயிறு என மூன்று பகுதிகளை உடையது.

◆ தலையில் இரண்டு உணர் இழைகள் உள்ளன. இவற்றால் மணத்தை அறியவும், ஒலியை உணரவும் முடியும்.

◆ தேனை உறிஞ்சிக் குடிப்பதற்கு வாயில் குழல் போன்ற உறுப்பு உள்ளது. இதற்கு உறிஞ்சு குழல் என்று பெயர். தேன் உறிஞ்சும்போது தவிர மற்ற நேரங்களில் சுருட்டி வைத்துக் கொள்ளும்.

◆ நான்கு இறகுகள், ஆறு கால்கள் உண்டு.

◆ தலையில் இரண்டு கண்கள் உண்டு. இவை கூட்டுக் கண்களாகும்.

◆ மகரந்தச் சேர்க்கைக்கு இவை உதவி புரிகின்றன.

◆ வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கையில், நான்கு பருவங்கள் உள்ளன. முட்டை, லார்வா அல்லது கம்பளிப் புழு, பியூபா அல்லது கூட்டுப் புழு, முதிர்நிலை ஆகியவை.

◆ கம்பளிப் புழு நிலையிலேயே தன் உடல் வலிமைக்குத் தேவையான சக்தியை பெற்று விடுகின்றன. முதிர்ச்சி அடைந்த பின் சாப்பிடும் உணவு அது பறக்கத் தேவையான சக்தியைத் தருகிறது.

◆ மழைக் காலத்தில் இறகை மடித்து, தலையை இறகுக்குள் வைத்து பூவிற்குள்ளும், காம்பிற்கு அடியிலும் பதுங்கிக் கொள்ளும்.


பூச்சி வெளிவரும். மெதுவாகத் தன் இறகை விரித்துப் பார்க்கும். கூட்டிலிருந்து வெளி வந்த ஒரு மணி நேரத்தில் தன் அழகான வண்ண இறகை அசைத்துக் கொண்டு பறக்க ஆரம்பிக்கும்.

பூந்தேன், பழச்சாறு போன்றவையே வண்ணத்துப் பூச்சியின் முக்கிய உணவு.

முழு வளர்ச்சியடைந்த வண்ணத்துப் பூச்சி தான் பறப்பதற்கு தேவையான சக்திக்காகவே உணவருந்துகிறது. உடல் வலிமைக்கு தேவையான சக்தியை கம்பளிப் புழு பருவத்திலேயே பெற்று விடுகின்றன இந்த வண்ணத்துப் பூச்சிகள்.

வண்ணத்துப் பூச்சிகள் மிகவும் வேகமாகப் பறக்கக் கூடியவை. பருவ காலங்களில் நீண்ட தூரம் இடம் விட்டு செல்வதுண்டு.

வண்ணத்துப் பூச்சிகளின் இறகுகள் பல வண்ணங்களிலும், வடிவத்திலும் காணப்படுகின்றன. இந்த வண்ணங்கள் எதிரிகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் வண்ணத்துப் பூச்சிகளுக்கு உதவுகின்றன.



தீக்குச்சி விளையாட்டுகள்


உங்கள் வீட்டில் தீப்பெட்டி இருக்குமே. ஒரு தீக்குச்சியைப் பற்ற வையுங்கள். என்ன 'தீயை' உருவாக்குவது எளிதாக இருக்கிறதல்லவா? ஆனால் நம் முன்னோர்களுக்கு இவ்வளவு எளிதாக இருக்கவில்லை. முதலில் இரு குச்சிகளை உரச வேண்டி இருந்தது. காய்ந்த குச்சியை, புகையும் குச்சிகளுக்கு இடையே வைத்து, தீப்பற்றும் வரையில் ஊத வேண்டும். பின்னர் சிக்கி முக்கிக் கல் பயன்படுத்தப் பட்டது.

1680இல் ராபர்ட் பாய்ல் பாஸ்பரஸ் கண்டுபிடித்த போது தீக்குச்சியைக் கண்டு பிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ராபர்ட் பாய்லின் உதவியாளர் காட்ஃபாதர் ஹாக்விட்ஸ் தீக்குச்சி கண்டுபிடிப்பில் பெரும் பங்கு வகிக்கிறார். அவர் மரக்குச்சிகளை சல்பரில் தோய்த்து பாஸ்பரஸ் உதவியுடன் 'தீக்குச்சி'யை உருவாக்கினார். ஆனால் அது நாற்றமடிப்பதாகவும், ஆபத்தானதாகவும், செலவு அதிகமானதாகவும் இருந்தது. பாஸ்பரஸ் நச்சுத் தன்மை கொண்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.


1826ஆம் ஆண்டு ஜான் வாக்கர் தான் கண்டுபிடித்த தீக்குச்சிகளுக்கு 'லூசிபர்ஸ்' என்று பெயரிட்டார். ஆன்டிமனி சல்ஃபைட் பொட்டாசியம் குளோரைட் போன்றவற்றை பசை மற்றும் தண்ணீருடன் கலந்து ஓர் கலவையை உருவாக்கி மரக்குச்சிகளில் பூசினார். சொரசொரப்பான தாளில் உரசுவதால் அவை எரிந்தன.

1848-ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டு வேதியியல் பேராசிரியரான குடால்ஃப் போட்கர் ஓரளவு பாதுகாப்பான தீக்குச்சியைக் கண்டுபிடித்தார். பாஸ்பரஸ் உதவியுடன் ஓர் சிறப்புப் பூச்சு கொண்ட தாள் தயாரிக்கப்பட்டு, அதில் உரசினால் மட்டுமே எரியும்படியான தீக்குச்சிகள் தயாரிக்கப்பட்டன. இக்குச்சிகள் ஸ்வீட் ஜெ.ஈ.லண்ட்ஸ்ட்ரோம் என்பவரால் மேம்படுத்தப்பட்டு, நாம் இப்போது பயன்படுத்தும் குச்சிகள் தயாரிக்கப்பட்டன.


தீக்குச்சிகள் தீயை உருவாக்க மட்டுமல்ல, மகிழ்ச்சியளிக்கும் விளையாட்டுகள் மற்றும் புதிர்கள் போன்றவற்றை உருவாக்கவும் பயன்படுகின்றன. நம்மில் பலர் 'தீப்பெட்டி தொலைபேசி' செய்து மகிழ்ந்திருப்போம். தீக்குச்சி விளையாட்டுகள் சில வற்றை நாம் விளையாடுவோமா?



1) நீங்கள் 12 தீக்குச்சிகளை எடுத்துக் கொள்ளுங்கள். படத்தில் உள்ளபடி 4 சிறிய சதுரங்களையும் 1 பெரிய சதுரத்தையும் உருவாக்குங்கள். உருவாக்கி விட்டீர்களா? இப்போது 2 தீக்குச்சிகளை மட்டும் நீங்கள் எடுக்கலாம். 2 சதுரங்கள் கிடைத்தால் போதும்.



2) 9 தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஓர் கோடரியை உருவாக்குங்கள். 5 தீக்குச்சிகளை நீங்கள் நகர்த்தலாம். ஆனால் 5 முக்கோணங்களை உருவாக்க வேண்டும்.



3) நான்கு தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஒரு சதுரத்தை உருவாக்குங்கள். மேலும் நான்கு தீக்குச்சிகளைப் பயன்படுத்தி 2 சதுரங்களையும் 4 முக்கோணங்களையும் உருவாக்குங்கள்.

இவ்விளையாட்டுகள் உதாரணம்தான். உங்கள் கற்பனையைத் தட்டி விடுங்கள்; மூளைக்கு வேலை கொடுங்கள். இதை விட அற்புதமான விளையாட்டுகளை உருவாக்க முடியும்.

— **சி.டி. ரோம்**
சென்னை

விடை: 48ஆம் பக்கம்


கிளியக்கா...

பச்சை சட்டை போட்டிருக்கும்
பகட்டுக்கார கிளியக்கா
கிக்கி கிக்கி என்றாலே
கீகி கீக்கி என்பாளே

கோபம் வந்து விட்டாலோ
கொத்தி கொத்தி வைப்பாளே
கொய்யாப் பழமென்றாலே
கொள்ளை ஆசை கொண்டவளே!

அன்ன நடை நடந்திடும்
அழகு வண்ண கிளியக்கா
சிவப்பு வாய் தன்னாலே
சிங்கார மாய் பேசுவாளே!

— அ. அமலராஜன், ரைட்டன்பட்டி.



பலாக்கனி

இனி கனியாம் பலாக்கனி
காய்ந்து பழுப்பது மரத்தினடி!
அணிந்திருக்கும் மேலுடையோ
முள்ளம் பன்றித் தோற்றமடி!

மணிமணியாய்ச் சுளைகளடி
மனதைக் கவரும் பொன்களடி!
தனித்தேனின் சுவையுமடி
தந்திடும் பொன்நிறச் சுளைகளடி!

சின்னஞ்சிறு கொட்டைகளைச்
சிறைக்குள் வைக்கும் மூட்டையடி!
இலக்கியம் போற்றும் முக்கனியில்
இரண்டாம் இடமும் இதற்கடி!

— சின்னக்கலையம்புத்தூர்,
கெங்கை பாலதா.


வா இங்கே!


பாப்பா பாப்பா வா இங்கே
பாட்டுப் பாட வா இங்கே
பள்ளி சென்று நன்றாகப்
படிப்போம் நாமும் வா இங்கே.


காட்டுக் குருவி பறவைகள் போல்
கவலை யின்றி சுதந்திரமாய்
வீட்டுப்பாடம் செய்த பின்னே
விளையா டிடுவோம் வா இங்கே

பாரதம் காக்கும் வீரர்களாய்
பாடல் புனையும் கவிஞர்களாய்
உயிரைக் காக்கும் மருத்துவராய்
உயர்ந்தே வாழ்வோம் வா இங்கே.

— அம்பிகா மாடசாமி., இராமேஸ்வரம்.







சடுகுடு ஆட்டம்


சடுகுடு ஆட்டம் ஆடணும்
சக்தி கொண்டே பாடணும்
விறுவிறுப் பாக சாடணும்
வீரம் பொங்க மோதணும்

மூச்ச டக்கிச் சொல்லணும்
முன்னும் பின்னும் ஓடணும்
பாச்ச லோடு பதுங்கணும்
பாய்ந்து கோட்டை கடக்கணும்

தடுத்துப் பிடித்தால் தள்ளணும்
தடைகளைத் தகர்த்து ஓடணும்
சமத்துப் பையனாய் ஆடணும்
சரித்திரம் பலவும் படைக்கணும்

தமிழர் கலையாம் சடுகுடுவை
தரணி பார்த்து மகிழுது
உலக அரங்கில் ஆட்டத்தை
உங்கள் டீ.வி. காட்டுமே!

— கு. காளிமுத்து, வல்லம்.





பிருந்தாவனக் கவியரங்கம்!



தீக்குச்சி

முண்டாசு கட்டிய தீக்குச்சி!
முகம் கறுத்த தீக்குச்சி!

வெள்ளை உடலுக்குக் கறுப்பாக
குல்லாய் அணிந்த தீக்குச்சி!

உரசிய உடனே பக்கெனவே
பற்றி எறிந்திடும் தீக்குச்சி!

தவறே செய்யா விட்டாலும்
தலைக்கனம் நம்மை அழித்துவிடும்!

உண்மை இதனை உரைத்திடவே
உருவம் கொண்ட தீக்குச்சி!

— எம். கணேசன், காரைக்கால்.

காலண்டர்





காலண்டர் இல்லாத வீடு உண்டா? காலண்டர் இல்லா வீட்டால் எந்தப் பண்டிகை எந்தத் தேதியில், எந்தக் கிழமையில் வருகிறது என்பதை நாம் அறிய சிரமப்பட வேண்டியிருக்கும் அல்லவா! காலண்டர் எப்படி உருவானது என்று பார்ப்போமா?

காலண்டருக்கு முன்பு சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைக் கொண்டே காலத்தைக் கணக்கிட்டார்கள்.

முதன் முதலில் ஆண்டின் நீளத்தை ஏறக்குறைய சரியாகக் கணித்தவர்கள் எகிப்தியர்களே! நைல் நதியில் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. அவ்வாறு ஓடிய இரண்டு சந்தர்ப்பங்களுக்கு நடுவில் 365 நாட்கள் இருப்பதைக் கண்டார்கள். இதை 12 ஆல் வகுத்து ஒவ்வொரு மாதத்திற்கும் 30 நாட்களென்றும் எஞ்சிய 5 நாட்களை ஆண்டின் கடைசியிலும் சேர்த்தனர்.

கி.மு. 3000ல் பாபிலோனியர்கள் ஆண்டுக்கு 12 சந்திர மாதங்களை உருவாக்கிக் கொண்டனர். இது 354 நாட்களையே கொடுத்தது. மீதியிருந்த நாட்களை மற்றொரு மாதமாக சேர்த்துக் கொண்டார்கள். இதை ஆசியர்களும், யூதர்களும் பயன்படுத்தினர்.

கிறிஸ்தவர்கள், கிறிஸ்து பிறந்த நாளை ஆரம்ப நாளாகக் கருதுகின்றனர். முஸ்லீம்கள் ஹிஜிரா என்ற காலண்டரை கி.பி. 622லிருந்து துவக்கினர்.

தற்போது நாம் பயன்படுத்தி வரும் காலண்டருக்கு முன்னோடி ரோமாபுரி பேரரசரான ஜூலியஸ் சீசரால் கொண்டு வரப்பட்ட காலண்டரே! ஜனவரி முதல் தேதியை ஆண்டின் முதல் நாளாக மாற்றியவர் இவரே. இது ஜூலியன் ஆண்டு என்று அழைக்கப்பட்டது. இவரது ஆண்டில் 365¼ நாட்கள் இருந்தன.

ஜூலியன் காலண்டரில் இருந்த குறைபாடுகளை நீக்கி கிரிகாரி XIII என்ற போப்பாண்டவர் 1582 ஆம் ஆண்டு இறுதி செய்தார். தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் காலண்டர் இதுவே.

காலம் ஆண்டுகளாகவும், மாதங்களாகவும், வாரங்களாகவும், நாட்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவை பூமி, சந்திரன் முதலிய கோள்களின் இயக்கத்துடன் தொடர்புடையவை. பூமி தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக் கொள்ள 24 மணி நேரமாகிறது. இரு அமாவாசைகளுக்கு நடுவிலுள்ள காலம் ஒரு சந்திர மாதம். பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர ஒரு சூரிய ஆண்டு ஆகிறது.

நடுப்பக்கத்தில் கோகுலம், புத்தாண்டு பரிசாக உங்களுக்கு காலண்டரை அளிக்கிறது. மெதுவாக பின்னை நீக்கி உங்கள் புத்தக அலமாரியிலோ அல்லது நீங்கள் படிக்கும் இடத்திலோ ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். உபயோகமாக இருக்கும்.

புத்தாண்டு வாழ்த்துகள்!

1998

ஜனவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

பிப்ரவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28

மார்ச்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				



1998

ஜூலை

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

ஆகஸ்ட்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

செப்டம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

ஏப்ரல்


ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

மே

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

ஜூன்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				



கோகுலம்

அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31


நவம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		





சார் தபால்!

எங்கும் கோகுலம் சிறுவர் சங்கம்!

✉ கிரிக்கெட் டேட்டா எங்களுக்கு மிகவும் உபயோகமாக இருந்தது. இதில் என்ன வருத்தம் என்றால் 1929 ஆம் ஆண்டிலிருந்து 1997 வரை ஒரு இந்தியர்கூட ஒரே இன்னிங்ஸில் 300 ரன் களுக்கு மேல் எடுத்து சாதனை புரியவில்லை என்பதுதான். சில ஸ்கோரில் மட்டும் • குறி போடப்பட்டுள் ளதே ஏன்?

ப. விஜயகுமார்,
வேலநத்தம்,
சேலம் மாவட்டம்

• குறிக்கு ஆட்டமிழக் காதவர்கள் என்ற குறிப்பு கீழே தரப்பட்டுள்ளதே! மீண்டும் கோகுலத்தை எடுத்துப் பாருங்கள் விஜயகுமார். (-ஆர்)

✉ முத்துராமலிங்கபுரம் கோகுலம் சிறுவர் சங்கம் நீண்ட காலமாகவே இயங்கி வருகிறது. குழந்தைக் கவிஞர் இந்த சிறுவர் சங்கத்தை துவக்கி வைத்தார். திரு. ரேவதி அவர்களும் பார்வையிட்டிருக்கிறார். எங்கள் சிறுவர் சங்கப் படைப்புகள் கோகுலத்தில் நிறைய வந்துள்ளன. மீண்டும் புதிய உறுப்பினர்களுடன் துவக்கி யிருக்கிறோம்.

ச. ஸ்ரீநாத், கோகுலம் சிறுவர் சங்கம்,
முத்துராமலிங்கபுரம், விருதுநகர் மாவட்டம்.

✉ கோகுலம் 'சுழற் கோப்பை' பள்ளி மாண வர், மாணவியருக்கு மட்டும்தானா? எங்களைப் போன்ற பள்ளி படிப்பை முடித்து வீட்டில் இருந்தபடியே படைப்புகளை அனுப்புவோருக்கு கிடையாதா?

க. ஸ்டெல்லா மேரி, பெரியகடை வீதி,
திண்டிவனம்.

கோகுலம் சுழற்கோப்பை தனிப்பட்ட முறையில் எந்த மாணவருக்கோ, மாணவிக்கோ வழங்கப்படவில்லை. எந்தப் பள்ளி மாண வர்களின் படைப்புகள் அதிகமாக இடம் பெறுகிறதோ அப் பள்ளிக்கே இச் சுழற்கோப்பை. சரிதானே ஸ்டெல்லா! (-ஆர்)

✉ கருப்பம்புலம் ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளியில் கோகுலம் சிறுவர் சங்கம் தொடங்கியிருக்கிறோம்.

சிவ. பாக்யா, ஐந்தாம் வகுப்பு,
ஞானாம்பிகா உதவி தொடக்கப்பள்ளி,
கருப்பம்புலம்.

வாழ்த்துகள்! உங்களின் செயல்பாடுகளை எழுதி அனுப்புங்கள். (- ஆர்)

✉ 0 பற்றிய கட்டுரை புதுமையாக இருந் தது. 0யின் வண்ணம், வடிவம், எடை போன்ற விஷயங்களை அறிந்து கொள்ள உதவி யது 0கள் கட்டுரை!

க. காத்யாயனி, ஆறாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல் நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

✉ 'சான்டா கிளஸ்' கட்டுரை மிகவும் அருமை. கிறிஸ்துமஸ் தாத்தாவின் உடை பற்றிய வரலாறு இதுவரை நான் எங்கும் படித்ததில்லை. பல தகவல்கள் சுவாரசியமாக இருந்தன. படிக் கும்போது ஆர்டிக் பிரதேசமே கற்பனைக்கு வந்து விட்டது. கலாவின் படங்களும் அழகு சேர்த்தன.

ம. இந்திராதேவி,
எட்டாம் வகுப்பு,
மணக்கால் அய்யம்பேட்டை.

✉ கோகுலம் சுழற் கோப்பையை கைப்பற்ற நாங்கள் தயாராகி வருகிறோம். நிச்சயம் எங்கள் பள்ளி மாணவர்களை பங்கு பெற வைத்து சுழற் கோப்பையை வாங்காமல் விட மாட்டோம்.

சுப்பு வேதையா சித்திரவேலு,
உதவி ஆசிரியர்,
ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி,
கருப்பம்புலம்.


✉'கோகுலம் சுழற் கோப்பை' செய்தியை படித்தவுடன் எப்படியேனும் எங்கள் பள்ளி வென்றிட வேண்டும் என்ற எண்ணத்தில் பள்ளி அறிவிப்புப் பலகையில் வெளியிட்டு இருக்கி றோம்.

ஆபில் முஹம்மது, மஹபூப் பாஷா,
அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி,
வத்தலகுண்டு.

5 ஸ்டான்லி அறிமுகம்

நீண்ட நாட்களுக்குப் பிறகு சித்ரா அன்று பெரிதும் மகிழ்ச்சியோடு இருந்தாள். அப்பாவும் அம்மாவும் தனது ஓவியத் திறமையைக் குழி தோண்டிப் புதைத்து விடுவதில் தீவிரமாக இருந்தாலும், அன்பு [illegible]த்தை அதை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார் என்ற உண்மை அவளுடைய நைந்த மனதுக்குப் பெரிதும் ஊக்கமூட்டுவதாக இருந்ததே மகிழ்ச்சிக்குக் காரணம்.

அப்பா தந்த இருபது ரூபாயில், நாற்பது சாக்லேட் வரும்படி வாங்கிக் கொண்டாள். முப்பது அவளுடைய வகுப்புத் தோழிகளுக்கு. மீதி ஆசிரியைகளுக்கு.



மாலையில் அப்பா சீக்கிரம் திரும்பி விட்டார். அம்மாவும், சித்ராவும் தயாராக இருந்தனர். மூவரும் கோவிலுக்குக் கிளம்பினர்.

அவர்கள் சென்ற ஆலயம் மிகவும் புராதனமான சோழர் காலத்து ஆலயம். சமீபத்தில்தான் அதற்குக் கும்பாபிஷேகம் ஆகியிருந்தது. அதோடு இரண்டொரு நாள்களுக்கு முன்பு நல்ல மழை பெய்திருந்ததால், தூசுகள் எல்லாம் களைந்து, துடைத்து எடுத்ததுபோல் வண்ணக் கோபுரம் பளிச்சென்று கண்ணைப் பறித்தது.

சிற்ப விசித்திரங்கள் எல்லாம் நிறைந்த புராதனப் பெருமை மிக்க ஆலயமாக இருந்தாலும் அது நகரை விட்டு ஒதுங்கியிருந்ததால் எப்போதுமே கூட்டம் இருக்காது. திருவிழா, பண்டிகை போன்ற சிறப்பு நாள்களில்தான் கூட்டம் இருக்கும்.

இவர்கள் சென்றபோது கோபுர வாசலுக்கு வெளியே, சன்னதித் தெருவில்

வெ. நல்லதம்பி



''ஓட்டப் பந்தயம் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி நாளை விடுமுறைன்னு சொன்னது தப்பாப் போச்சு!''

''அடடே என்னாச்சு?''

''ஓட ஆரம்பிச்ச எல்லா பசங்களும் நேரா வீட்டுக்குப் போயிட்டாங்க!''

— காழி ஆர். சீதாராமன்

வெள்ளைக்காரருக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும். சினிமா டைரக்டர் தொப்பி போல் தலையில் ஒரு தொப்பி வைத்திருந்தார். பொன்னிறத்தில் அரை குறை தாடி; கறுப்பு மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார்.

அவர் தமது தோற்றத்தில் அதிக கவனம் செலுத்துகிறவராகத் தோன்றவில்லை. தொள தொளவென்று ஒரு சட்டை. கால் சட்டையோ கணுக்கால் வரை நீளாமல் முழங் காலுக்குச் சற்றுக் கீழே நார் நாராக பிரிக்கப்பட்டுத் தொங்கியது.

கையில் அழகான காமிரா வைத்திருந்தார். கூட்டத்தில் ஒரு ஆண் அதைப் பிடுங்கும் முயற்சியில் தீவிரமாக இருந்தான். கோயிலுக்கு வந்து சென்று கொண்டிருந்தவர்கள் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போனார்கள். சிலர் திரும்பிப் பார்த்துவிட்டு 'ஏதோ நடக்கிறது' என்று பொறுப்பில்லாமல் போனார்கள்.

ஏதோ சிறு கூட்டம்.

"காமிராவைப் பிடுங்குப்பா" என்று யாரோ ஒருவன் சத்தம் போட்டான்.

"பிடுங்குறது என்ன? போடு ஒன்னு? இல்லேன்னா அந்த ஆள் தர மாட்டான்" இப்படி ஒரு குரல்.

"என்ன துணிச்சல்! நம்ம யாரையும் கேட்காம கொள்ளாம நம்ம ஊர்க்கோயில் கோபுரத்தை வெள்ளைக்கார பய படம் புடுச்சிருக்கான்!" - ஒரு முரட்டுக்குரல் உறுமிற்று.

"பெரிசா சத்தம் போட்டு உருட்டி விரட்டுப்பா! அப்போதான் அந்த ஆளு கிட்டே இருந்து கணிசமா பணம் பிடுங்க முடியும்!"

''நம்ம மதத்தையே அவமதிச்சிட்டான்னு இங்கிலீஷ்லே சொல்லு. அப்ப தான் அரண்டு போவான்."

இப்படி ஆளுக்கு ஆள் உரத்த குரலில் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் சுமார் முப்பது நாற்பது பேர் இருந்தார்கள். கூட்டத்தின் நடுவில் ஒரு வெள்ளைக்காரர்!

அவர்கள் போட்ட 'காச் மூச்' கத்தல் அந்த வெள்ளைக்காரருக்குப் புரியவில்லை. மொழி தெரியாத இடமல்லவா? அதனால் அமைதியாக என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டு நின்றார்.

அப்பா அம்மாவோடு வந்து கொண்டிருந்த சித்ரா கூட்டத்திற்கு அருகே வந்ததும் நின்று கவனித்தாள். நிலைமை என்ன என்பதை உடனே அவர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள்.

"அப்பா, பாவம் அந்த வெளி நாட்டுக்காரர்! அந்த ஏமாற்றுக் கும்பல் அவரிடம் பணம் பறிக்க மிரட்டுகிறது. நாம் அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்!" என்றாள்.

பசுபதி அந்த கும்பலைக் கூர்ந்து பார்த்தார். தான் போய் அந்த வெள்ளைக்காரருக்காகத் தனியே பரிந்து பேசினால் எவ்விதப் பயனும் இருக்காது என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. காரணம், அது அப்படிப்பட்ட கும்பல். நியாய வாதம் எல்லாம் அங்கு எடுபடாது! நோக்கமே எப்படியாவது ஏமாற்றிப் பணம் பறிப்பது என்று வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் நியாயம் பேசினால் எடுபடுமா?

"என்ன யோசிக்கிறீங்க! உதவிக்குப் போறீங்களா? இல்லே கோயிலுக்கு வர்றீங்களா" என்று கேட்டார் சித்ராவின் அம்மா மங்கை.

"ஒரு நிமிஷம்! அதோ எனக்கு ஒரு

துணை கிடைத்து விட்டார்'' என்றார் பசுபதி.

"வெள்ளைக்காரருக்குத் துணை போக வேண்டிய நீங்கள், உங்களுக்கு ஒரு துணையைத் தேடுகிறீர்களா?'' என்றார் அம்மா.

"பின்னே வேண்டாமா? நான் போய் அந்தக் கும்பலிடம் வெள்ளைக்காரருக்குப் பரிந்து பேசினால், என் கதி என்னவாகும்? என் மேல் பாய்ந்தாலும் பாய்வார்கள்! ஏன் வம்பு! அதோ அங்கே போலீஸ்காரர் ஒருவர் வருகிறார்! முதலில் அவரிடம் போய்ச் சொல்லிப் பார்க்கிறேன்'' என்று பசுபதி 'விடு விடெ'ன்று நடந்தார். சித்ராவும் அம்மாவும் அந்த இடத்திலேயே நின்றார்கள்.

"சார்! ஒரு நிமிஷம்!'' என்றார் பசுபதி.


"என்ன விஷயம்?'' போலீஸ்காரர்தான் கேட்டார் முறுக்கு மீசையைத் தடவியவாறு. ஒரு கை இடுப்பு பெல்ட்டையும் சரி செய்து கொண்டது.

"அதோ, அங்கே மிரட்டிக் காசு பறிக்கும் ஒரு கும்பல் நிற்கிறது. நடுவே ஒரு வெள்ளைக்காரர் மாட்டிக் கொண்டார். அவர் கையில் உள்ள காமிராவைப் பிடுங்க இருக்கிறார்கள். பாவம் அவர்; உடனே ஏதாவது செய்து அவரையும் காமிராவையும் காப்பாற்ற வேண்டும்'' என்றார் பசுபதி.

''எனக்கு அவசரமாக ஒரு வேலை கொடுத்து பெரிய அதிகாரி அனுப்பி இருக்கிறார். இதைக் கவனிக்க வந்தால் நேரம் இதுக்கே சரியாயிடும். என் வேலை கெட்டுப் போய் விடும். மேலதிகாரி கோபித்துக் கொள்வார்'' என்று நடையைக் கட்ட முயன்றார் கான்ஸ்டபிள்.

பசுபதி, ''சார் சார், நீங்க எதுவும் செய்ய வேண்டாம். ஒரு நிமிஷம் வந்து தலையைக் காட்டி மிரட்டிட்டுப் போங்க! மற்றதை நான் பார்த்துக்கிறேன்'' என்று சொன்னவுடன் அரை குறை மனதுடன் போலீஸ்காரர் வந்தார். பசுபதி முன்னே நடந்தார்.

''என்ன, நாம் தனியா வேறு ஒரு



நாட்டிலே போய் இப்படி மாட்டிக்கிட்டா நமக்கு எப்படி இருக்கும்? அப்போ நமக்கு ஒருத்தர் உதவிக்கு வந்தா, அவரை நாம் வாழ்நாள் பூரா நன்றியோட நினைப்போம் இல்லியா. அப்படித்தான் சார் உங்க உதவி அந்த வெள்ளைக்காரருக்கு இருக்கப் போகுது. அதோடு நம்ம நாட்டைப் பற்றிய தவறான எண்ணம் வெளி நாட்டவர்களுக்கு ஏற்படுவதை இது போன்ற நிகழ்ச்சிகள் தடுக்கும். இதுவேகூட தேச நலனுக்காக நாம் செய்யும் தொண்டு என்றும் சொல்லலாம்."

பசுபதி இப்படி சொன்னவுடன், போலீஸ்காரர் மனதில் ஏதோ ஒன்று உரைத்தது. மிடுக்காக நடந்தார். லத்திக் கம்பைத் தரையில் சற்றுப் பலமாகத் தட்டி, "எங்கே அந்தக் கும்பல்" என்று கேட்டார். பசுபதி, கும்பல் நின்ற இடத்திற்கு அவரைக் கொண்டு வந்து விட்டார்.

"என்னப்பா கூட்டம்?" போலீஸ்காரர் குரலைக் கேட்டவுடன் கவனம் திசை திரும்பியது. கூச்சல் சற்றுக் குறைந்தது!

"சார், இவர் நம்ம ஊர்க் கோயிலை போட்டோ எடுத்துட்டார். சட்டப்படி போட்டோ எடுக்கக் கூடாது சார். என்னன்னு அந்த ஆளை விசாரிங்க சார்" - கூட்டத்தின் தலைவன் போல் இருந்த முரடன் ஒருவன் போலீஸ்காரரைப் பார்த்துச் சொன்னான். அவன் குரலில் பணிவை விட அதிகாரமே தெரிந்தது!

"எப்போ போட்டோ எடுத்தார்?" போலீஸ்காரர் விசாரித்தார். "இப்போதான் சார்" என்றான் ஒரு ஆள்.

"எங்கே, அவரை நல்லாப் பார்க்கணும், ஒதுங்குங்க."

கும்பல் வழிவிட்டு விலகியது.

"ஹலோ" என்று நட்புரிமையுடன் அந்த வெளிநாட்டுக்காரர் அந்த நிலைமையிலும் அவரைப் பார்த்தார்.

"எதைப்பா அவர் போட்டோ எடுத்தார்? யாராவது சொல்ல முடியுமா?" - கூட்டத்தைப் பார்த்து போலீஸ்காரர் கேட்டார்.

அதோ அந்த கோபுரத்தையும் கலசத்தையும்தான் எடுத்தார்" - முண்டாசுத் தலைப்பாகையுடன் இருந்த ஒருவன் சொன்னான்.

"உனக்கு நிச்சயமாத் தெரியுமா?"

"காமிராவை வச்சு, அந்த ஆள் அப்படியும் இப்படியும் திருப்பும்போது அதுகூட நமக்குத் தெரியாதா சார்?" - இப்படி ஒரு ஆள் சொன்னான்.

"அப்படி இல்லேப்பா! நாம ஒருத்தரைக் குத்தம் சொல்லும்போது, சரியாத் தெரிஞ்சுக்காம சொல்லிடப் படாது. இவருக்கு ஒன்றும் ஆகாமல் இவரைப் பாதுகாத்து, இவரோட நாட்டுக்கு இவர் விமானம் ஏறும் வரை நம்ம அரசாங்கம் பொறுப்பு. அதுக்குத்தான். அதோட இல்லே! போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து உங்க புகாரை நீங்களாக எழுதிக் கொடுக்கணும்!" - கும்பல் சற்றே கலைந்தது.

"சரி போறது. எந்த இடத்திலே நின்னு போட்டோ எடுத்தார்?"

மீதி இருந்த கும்பலில் ஒரு குரல் "இதோ இங்கே நின்னுதான் எடுத்தார் சார்" பளிச்சென்று பதில் சொன்னது.

"அப்படியானால், சட்டப்படி நாம் அவரை ஒன்றும் செய்ய முடியாது. கோயிலுக்குள் போய் போட்டோ எடுத்திருந்தாத்தான் நாம் அவர் மேல் நடவடிக்கை எடுக்க முடியும். தெரியுமா உங்



பறவையைப் போல் பறந்தவர்?

ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் பறவைகள் பறப்பதைப் பார்த்து தானும் அது போன்று பறக்க முடியும் என்று கூறி ஒரு நாள் தன்னுடைய வீட்டின் மாடியறையிலிருந்து ஜன்னலின் வழியாக கையை இறக்கை போன்று அசைத்துக் கொண்டு மேலேயிருந்து கீழே குதித்து விட்டார். நல்லவேளை அதிர்ஷ்டவசமாக கீழே குதித்த இடத்தில் அடர்த்தியான பூச்செடிகள் இருந்ததால் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்!

'மேதைகளின் கருத்துக் களஞ்சியம்'
நூலிலிருந்து: ருக்மணி குழந்தைவேல்

களுக்கு? இப்போ நீங்கதான் அவரை தொந்தரவு செய் திருக்கீங்க. அதுக்கு உங்க மேலதான் கேஸ் போடணும். யார் யாருப்பா அவரைத் தொந் தரவு செய்தது? வாங்க ஸ்டே ஷனுக்கு'' என்று ஓங்கிய குரலில் கேட்டார் போலீஸ் காரார். கூட்டத்தில் மீதி இருந்தவர் களும் ஒவ்வொரு வராக நழுவ ஆரம் பித்தார்கள்.



வெள்ளைக் காரர் முகத்தில் இருந்த குழப்பம் விடைபெற்று அமைதி நிலவியது; புன்முறுவல் பூத்தது.

பசுபதி, போலீஸ்காரரைப் பார்த்து நன்றி தெரிவித்தார். 'ஓகே, நான் வர்றேன்' என்று சொல்லிய வண்ணம் போலீஸ்காரர் புறப்பட்டார்.

என்ன நடந்திருக்க வேண்டும் என் பதை ஊகித்துவிட்ட வெளிநாட்டுக்காரர் "நன்றி சார்'' என்று போலீஸ்காரரின் கையைக் குலுக்கினார். வெள்ளைக் காரரைப் பார்த்து "சாரி ஃபார் த டிஸ்டர் பன்ஸ்'' என்று பதிலுக்கு சொன்ன போலீஸ்காரர் கிளம்பிப் போனார்.

பசுபதிதான் போலீஸ்காரரை அழைத்து வந்து சரியான நேரத்தில் உதவி செய்தார் என்பதை அந்த வெள்ளைக் காரர் ஊகித்து உணர்ந்து கொண்டதால், "தேங்க் யூ மிஸ்டர்...." என்று பெயரைத் தெரிந்து கொள்வதற்காக, வாக்கியத்தை இழுத்து நிறுத்தினார்.


"பசுபதி" என்று தன் பெயரைப் பூர்த்தி செய்தார் பசுபதி! அத்துடன் "நோ மென்ஷன் ப்ளீஸ்" என்றும் சொன்னார்.

இது போன்ற சின்னச் சின்ன உதவி கள்தான் வெளிநாட்டுக்காரர்களின் மன தில் நம் நாட்டைப் பற்றிய நல்லெண்ணம் உருவாகப் பெரிதும் உதவும் என்று பசுபதி கேள்விப்பட்டிருந்தார். அதைச் செய்து காட்ட இது ஒரு சிறு சந்தர்ப்பமாகப் பட்டது அவருக்கு.

தன் மனைவி மங்கையையும் சித்ரா வையும் பக்கத்தில் அழைத்து அவருக்கு அறிமுகம் செய்தார். சித்ரா தன்னைக் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே அவ ருக்கு உதவ முன் வந்ததாகக் கூறினார். அந்த வெள்ளைக்காரரும், தன் பெயர் 'ஸ்டான்லி' என்று கூறி தான் பிரான்ஸ் நாட்டிலிருந்து சுற்றுலாப் பயணியாக வந்திருப்பதை எடுத்துச் சொன்னார்.

"இந்தியா, வடக்கே டில்லி, ஆக்ரா, உதய்பூரோடு நின்று விடுவதில்லை; தெற்கே சென்னை, பெங்களூர், மதுரை போன்ற இடங்கள் வரை பரந்து விரிந்த ஒன்று'' என்று தாம் கேள்விப்பட்டிருப் பதாக அவர் சொன்னார்.

''எங்களுக்கு மிகவும் பிடித்த ஊர் பாண்டிச்சேரி. எங்கள் கலாச்சாரம் இன் னும் அங்கு கொஞ்சம் இருப்பதாகக் கேள் விப்பட்டிருக்கிறேன். எங்கள் நாட்டவர் பல பேர் அங்கு வந்து செல்வதாகவும் சில பேர் நெடுநாள் தங்கி இருப்பதாகவும்கூட என் நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். அங்கே போகும் வழியில்தான் இங்கே வந்திருக்கிறேன்'' என்று பசுபதியிடம் ஸ்டான்லி சொன்னார்.



நிறுத்தி நிதானமாக ஆனால் கூர்மையான பார்வையுடன் அவர் பேசினார்.

மங்கைக்கும், சித்ராவுக்கும் ஸ்டான்லியின் மொழி தெரியவில்லை என்றாலும் அவர் பேசிய விதமும், முகத் தோற்றமும் பிடித்து விட்டன.

தாங்கள் சித்ராவுடன் பிறந்த நாளை முன்னிட்டுக் கோயிலுக்கு வந்திருப்பதாக மங்கை தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னார். அவர் தமிழில் சொன்னதை பசுபதி ஆங்கிலத்தில் ஸ்டான்லியிடம் எடுத்துச் சொன்னார். ஸ்டான்லி " மெனி ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆப் தி டே" என்று சித்ராவிடம் கை நீட்டி, கை குலுக்கித் தன் வாழ்த்தைத் தெரிவித்தார். உச்சி முதல் பாதம் வரை பார்த்தார். அந்தப் பார்வை, காமிராவால் மேலிருந்து கீழே பார்த்தது போல் இருந்தது. சித்ராவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். ஒரு காகிதத்தையும் ஒரு நோட்டுப் புத்தகத்தையும் தன் தோள் பையிலிருந்து எடுத்தார்.

சில கோடுகள். சில புள்ளிகள். அவ்விரல்கள் பென்சிலை அங்குமிங்கும் இழுத்தன. என்ன நடக்கிறது என்பதை ஒரு சில நிமிடங்களிலேயே சித்ரா புரிந்து கொண்டாள். அப்பாவையும் அம்மாவையும் ஏறெடுத்துப் பார்த்தாள். அவர்களும் புரிந்து கொண்டது போலத் தலையாட்டினார்கள்.

இருபது நிமிடத்தில், சித்ராவின் படம் ஸ்டான்லியின் தாளில் அபாரமாய் உருவாகி இருந்தது! "நீங்கள் கோயிலுக்குள் சென்று வாருங்கள். நான் மீதியை டச்சப் செய்து அதற்குள் முடித்து வைக்கிறேன்"

அவர்கள் அர்ச்சனை செய்து கொண்டு கோயில் பிராகாரம் சுற்றி முடித்து விட்டுத் திரும்பினார்கள். கோயிலுக்கு வெளியே காத்திருந்த ஸ்டான்லி "உன் பிறந்த நாளுக்காக உனக்கு நான் தரும் எளிய பரிசு இது" என்றவாறே சித்ராவின் படத்தை நீட்டினார்.

படத்தை வாங்கிப் பார்த்த சித்ராவும் பெற்றோரும் அசந்து போய் விட்டார்கள். படம் சித்ராவை போட்டோ எடுத்த மாதிரியே இருந்தது. 'சுபர்ப் போர்ட்ரயிட்' என்று சொல்லி ஸ்டான்லிக்கு நன்றி தெரிவித்தார் பசுபதி.

அதற்கு மேல் அங்கே இருந்தால், சித்ராவின் ஓவியத் திறமை பற்றி ஏதாவது கூறும்படி நேர்ந்து, அவளுக்கு ஊக்கமளிக்கும்படி ஸ்டான்லி ஏதாவது கூறி விடுவாரோ என்று பசுபதிக்குப் பயம். ஸ்டான்லி ஓவியம் வரையக் கூடியவர் என்பது தெரிந்திருந்தால் அவர் அவரைக் காப்பாற்ற இவ்வளவு ஆர்வமாக இருந்திருப்பாரா என்பதே சந்தேகம்! அதனால் பசுபதி கை கூப்பி விடை பெற முயன்றார்.

ஸ்டான்லி சித்ராவின் படத்தை வரைந்ததையும், கோயில் கோபுரத்தில் உள்ள சிலைகளைப் பார்த்துத் தொடர்ந்து படம் வரைவதையும் வேடிக்கை பார்க்க இன்னொரு கும்பல் அங்கே கூடியிருந்தது. அதில் பெரும்பாலும் சிறுவர்களே இருந்தார்கள். சித்ராவும் ஸ்டான்லி படம் போடுவதை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

பசுபதி கை கூப்பி விடை பெற இருந்த நேரத்தில் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடந்தது. கூட்டத்தில் இருந்த சிறுவன் ஒருவன் தயங்கித் தயங்கி சித்ராவிடம் வந்தான். அவனிடம் ஒரு நியூஸ்பேப்பர் கவர் இருந்தது. அதில் அரிசிப் பொறி வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு வந்தான். அந்த நியூஸ் பேப்பரில்... ஆமாம் அது... சந்தேகமே இல்லை! சித்ரா சில மாதங்களுக்கு முன் அமைச்சரிடம் பேனா

பரிசு வாங்கிப் புகைப்படம் வெளியாகி இருந்த அதே பிரபல ஆங்கில செய்தித்தாள்தான் அது! அதைப் படித்துத்தான் அத்தை, பிறந்தநாள் பரிசாக 'ஆர்ட்டிஸ்ட் கிட்'டை வாங்கியனுப்பியிருந்தார்.

ஸ்டான்லியிடம் சிறுவன் அந்த கவரைக் காட்டினான். ஆங்கிலத்தில் அது இருந்ததால் அவரால் படிக்க முடிந்தது.

"என்ன அதிசயம்! நீயும் ஒரு சிறந்த ஓவியரா?" என்று சித்ராவின் கையை பிடித்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் கூறினார் ஸ்டான்லி.

எது நடந்து விடக் கூடாது என்று பசுபதி கிளம்பி விடத் துடித்தாரோ அதுவே நடந்து விட்டது! அவர் தவித்தார். ஆனாலும் அந்த நிலையில் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"இந்த இரகசியத்தை ஏன் என்னிடம் சொல்லவில்லை?" என்று உரிமையுடன் செல்லமாகக் கடிந்து கொண்டார் ஸ்டான்லி சித்ராவிடம்.

மரியாதைக்குக்கூட பசுபதியோ, அம்மாவோ, சித்ராவோ அவரைத் தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைக்கவில்லை. ஆனால் ஸ்டான்லி அதை இலட்சியம் செய்யவில்லை. "இன்னும் இரண்டு நாள் சென்னையில் இருப்பேன். நானே நாளை மாலை உங்கள் வீட்டுக்கு வருகிறேன்" ,என்று கூறி, முகவரி, வரும் வழி எல்லாவற்றையும் விவரமாகக் கேட்டு எழுதிக் கொண்டுதான் அவர்களைப் போக விட்டார்!

அடுத்த நாள் அப்பாவும் வீட்டில் இருப்பதாக ஆயிற்று. ஸ்டான்லி சொன்னபடி வந்துவிட்டார். தன்னைப் படம் வரையச் சொல்லி, அதில் சித்ராவின் கையெழுத்தையும் வாங்கிக் கொண்டு, தனது முகவரியையும் தந்து புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

"மிஸ்டர் பசுபதி, உங்கள் மகளைப் பார்த்து நான் பெருமை அடைகிறேன். உங்களைச் சந்தித்ததில் மிகுந்த சந்தோஷம்" என்று சொல்லி பிரியாவிடை பெற்றார்.

பசுபதி அசந்து போய் நின்றார்.

(வளரும்)

குழந்தைக் கவிஞரின் பிறந்த நாள் விழா!



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் 75வது பிறந்த தின விழா, காரைக்குடி அழகப்பா பல் கலைக் கழக வளாகத்தில் நவம்பர் ஏழாம் தேதி நடைபெற்றது.

கவிஞரின் படைப்புகளில் இருந்து பாடல்கள், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. பல் கலைக் கழக துணை வேந்தர் திருமதி ருக்மணி அவர்களும், திருமதி ஆனந்தி அவர்களும் குழந்தைகளுக்குப் பரிசளித்து, சிறப்புரை ஆற்றினர். திருமதி தேவி நாச்சியப்பன் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்.




குறளைக் கண்டுபிடியுங்கள்!

இந்தப் பாடலை கவனமாகப் படியுங்கள். இது ஒரு திருக்குறளை நினைவூட்டும். அந்தக் குறளை எழுதி முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 31.1.98. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.






போட்டி



சிறந்த கல்வியே சீர்மிகு செல்வம்!



இப் பிறப்பில் நாம் முயன்று
தேடிப் பெற்றிடின் – அது
எப் பிறப்பும் தொடர்ந்து வந்து
சிறப்புச் சேர்க்குமாம்!

இப்படி ஓர் சிறந்த செல்வம்
உலகில் இருக்குதா? இருந்தால்
எனக் குடனே அதனைப் பற்றி
எடுத்துச் சொல்லுங்கள்!

வெள்ளத் தாலே அந்தச் செல்வம்
அழிந்து விடாதாம் – எந்த
வெப்பத் தாலும் அது எரிந்து
கருகி விடாதாம்!


அள்ளி அள்ளிக் கொடுத்த போதும்
குறைந்து விடாதாம் – அந்த
அரிய செல்வம் பற்றி நானும்
அறியச் சொல்லுங்கள்!

கேடில் விழுச் செல்வம்
அந்தச் சிறந்த செல்வமாம் – எந்தக்
கேட்டினையும் தீர்க்கும் திறன்
பெற்ற செல்வமாம்!

தேடித் தேடி அதனைப் பெற
நான் துடிக்கிறேன் – வழி
தெரிந்த வர்கள் சொன்னால் அதை
வணங்கி ஏற்கிறேன்!

— ரா. பொன்ராசன்


ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097



காந்திஜியின் வாழ்வில்...







பயனுள்ள பொருள்

ஒருமுறை காந்திஜி கப்பலில் பயணம் செய்யும் பொழுது, ஒரு ஆங்கிலேயர், காந்திஜியைக் கேலி செய்து சில கவிதைகளை எழுதி அவரிடமே கொடுத்தார். கொஞ்சம் படித்துப் பார்த்த காந்திஜி, ஒன்றும் பேசாமல் காகிதங்களில் குத்தியிருந்த குண்டூசியை மட்டும் எடுத்துக் கொண்டு, காகிதங்களை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார். அந்த ஆங்கிலேயர், ''ஐயா, அவைகளை ஏன் தூக்கி எறிந்து விட்டீர்கள்? அவற்றில் பயனுள்ள செய்திகள் பல உள்ளன!'' என்று சொல்ல, காந்திஜி சொன்னார் : "பயனுள்ள பொருளை நான் பத்திரமாக எடுத்து வைத்து விட்டேன்!''

நதியும் குளிரும்

சபர்மதி ஆசிரமத்தில் காந்திஜியும், நண்பர்களும், தொண்டர்களும், ஒரு பெரும் குடும்பமாகச் சேர்ந்து எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். ஒரு சமயம் அனைவரும் குளிப்பதற்காக, வெந்நீர் ஏற்பாடு செய்யப்படுவதை, காந்திஜி பார்த்து விட்டார். அனைவரையும் கண்டித்த காந்திஜி, "எளிய வாழ்க்கை வாழும் நாம் இவ்வாறு விறகை எரித்து, சுடுதண்ணீரைப் பயன்படுத்தலாமா? இறைவன் நமக்கு எதற்கு நதியைக் கொடுத்திருக்கிறான்?'' என்று கேட்டார். ஒரு சிறுவன், "பாபுஜி, கடவுள் நதியை மட்டுமல்ல, குளிரையும் கொடுத்திருக்கிறாரே!'' என்று சொல்ல, காந்திஜியுடன் சேர்ந்து அனைவரும் சிரித்து விட்டனர்.


ஆட்டோகிராஃப்

ஒருநாள், ஆசிரமத்தில் வேலை செய்து வந்த ஒரு தொழிலாளி, காந்திஜியிடம் கையெழுத்து (ஆட்டோகிராஃப்) கேட்டான். காந்திஜியும், 'அன்புடன் நடந்து கொள்ள செலவு எதுவும் இல்லை' என்று எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தார். கொஞ்சம் கோப குணமும், சுயநலமும் உள்ள அந்தத் தொழிலாளியின் சுபாவத்தில் அன்று முதல் பெரும் மாறுதல் தென்பட்டதைப் பார்த்து அனைவரும் வியந்தனர்.


கையெழுத்து

காந்திஜியின் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கும். பிற்காலத்தில் காந்திஜி மிகவும் வருத்தப்பட்டுக் கூறினார். "சிறிய வயதில் நான் என்னுடைய கையெழுத்தில் கவனம் செலுத்தத் தவறி விட்டேன். நல்ல கையெழுத்திற்கும் கல்வி கற்பதற்கும் சம்பந்தமில்லை என்ற தவறான கருத்து என்னிடத்தில் இருந்தது. பிற்காலத்தில் எவ்வளவு முயற்சி செய்தும் என்னால் என் கையெழுத்தை திருத்த முடியவில்லை. என்னுடைய தவறிலிருந்து மாணவர்கள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். சிறுவயதிலேயே கையெழுத்து அழகாக இருக்க மாணவர்கள் முயற்சி செய்ய வேண்டும். நல்ல கையெழுத்து, நல்ல கல்வியின் ஒரு பகுதி என்பதை சிறுவர்கள் உணர வேண்டும்.


– **எஸ். ஸ்ரீராம், நான்காம் வகுப்பு,**
ஸ்ரீ வாணி வித்யாலயா,
நங்கநல்லூர், சென்னை – 61.



சுந்தரம்! கடைக்குப் போய் மிளகாய் வாங்கிட்டு வர்றியா?
சரிம்மா.
எங்கேடா போறே - உட்கார்ந்து படி.
வந்து படிக்கி -றேன்ப்பா
டேய் கல்யாணம், படிப்புதான்டா முக்கியம். மிளகாய் இல்லை!
கதை: தமிழன்பன்
பெயரால் எழுந்த பிரச்சனை
ஒரு நாள் — நண்பன் மணி வந்தான் —
கல்யாணம்! கல்யாணம்!
எவன்டா அவன்?.. சுந்தரம்னு கூப்பிடு!
ஸ்கூல்ல கல்யாணம்னு தான் கூப்பிடு வோம்!
எல்லாம் அவர் செய்ற வேலை!
நண்பர்கள் பேசிக் கொண்டனர் —
என்னடா கல்யாணம், உங்கம்மா உன் பேர் சுந்தரம்னு சொல் றாங்க?
எங்கப்பா கல்யாணம்னு வச்சிருக்காங்க. அம்மா சுந்தரம்னு வச்சிருக் காங்க!
இந்தப் பேரால எங்க வீட்ல எப்பவும் பிரச்சனை தான்!
அப்படியா?



மறுநாள்~ வழக்கமான தகராறு-
கோபத்தைக் கிளப்பாதே! எங்கப்பா பெயர் - கல்யாணம்னு தான் கூப்பிடணும்.
எங்கப்பாவோட பேர் சுந்தரம். அதைத் தான் கூப்பிடணும்!
உங்க சண்டையைக் கொஞ்சம் நிறுத்தறீங் களா?
இல்லை, இதுக்கு ஒரு முடிவு பண்ணணும்
நீங்க சண்டை போடுங்க, நான் போறேன்!
இரவு மணி 8 -
சுந்தரத்தைக் காணோமே!
இப்ப வும் சுந்தரம் தானா?
சரி போய் கல்யாணத்தைத் தேடிட்டு வரேன்!
களைத்துப் போய் வீட்டுக்கு வந்தார் அப்பா-
எங்கேயும் காணோமே?
10 மணி இருக்கும்~
எங்கேடா போனே?
சொல்லிட்டுப் போகக்கூடாதா?
சொன்னேனே. காதில் விழுந்தாத்தானே? மாடியில்தான் இருந்தேன்.
ஏணி இல்லையே - எப்படிப் போனே?


மாடியில போய்ப் படிக்கத் தான் செய்தேன். தொந்தரவு இருக்கக் கூடாதுன்னு ஏணியை எடுத்து கீழலே போட்டுட் டேன்! படிச்சு முடிச்சதும் ஏணி யைப் போட்டுக் கீழே வந்தேன்..
சரி சரி..போ... சாப்பிடு...
இருங்கப்பா உங்க சண்டைக் கும் ஒரு தீர்வு கண்டு பிடிச்சாச்சு!
இரண்டு பெயரைத் தனித்தனியாக் கூப்பிட்டுக் கொண்டு சண்டை போடுவதை விட்டுட்டு...!
..ம்... சண்டை போடுவதை விட்டுட்டு? அப்புறம் சொல்லுங்க!


இரண்டு பெயர்களையும் சேர்த்து கல்யாண சுந்தரம்னு கூப்பிடுங்க!
ஆமாம் சுந்தரம், அதுதான் சரி!
என்னம்மா மறுபடியும்...?
ரொம்ப சரி....
இனிமே நாங்க கல்யாண சுந்தரம்னே கூப்பிடுறோம் போதுமா?
சந்தோஷத்துடன் சாப்பிடச் சென்றார்கள்-

நீலனுக்கு வந்த சாமி!

கொ.மா. கோதண்டம்

அமுதன் கேட்டான்: "என்னப்பா நீலா, இன்னும் எவ்வளவு தூரம் ஏறணும்."

"சாமி, பாதி தூரம் வந்திட்டம், வர்ற ஆத்தங்கரையில் கொஞ்சம் உட்காந்து போவம்."

அடுத்து வந்த மலையாற்றில் அவர்கள் பாறைகளில் அமர்ந்தனர். இளங்கோ கடலைமிட்டாய்களை மற்ற மாணவர்களுக்குத் தந்தான். கண்ணன் ஆளுக்கு இரண்டு முறுக்குகளைத் தந்தான். சுப்பிரமணியனும் அகிலனும் ஆற்று நீரில் குதித்துக் கும்மாளமிட்டதைப் பார்த்து மற்றவர்களும் நீரில் குதித்தனர். முருகேசன் மேலே அருவியில் குடிக்க தண்ணீர் பிடித்து வந்தான். கரையில் இருந்த ஒரு மரத் தில் கம்பால் தட்டி கீழே விழுந்த பழங்களைச் சேகரித்து எடுத்து வந்த நீலன், குளித்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தந்தான்.



"பழம் நல்லாருக்கே! என்ன பழம்?" என்றவாறே அவர்கள் எழுந்து மரத்தடிக்கு வந்தனர். ஒருவன் மரமேற முயன்றான்.

"மரத்துல ஏற வேண்டாம். வெறும் முள்ளாயிருக்கும்" என்று நீலன் விடுத்த எச்சரிக்கையை மதிக்காமல் ஒருவன் எட்டிக் குதித்து கிளையைப் பிடித்தான். முட்கள் கிழித்துவிடவே "ஆ"வென அலறியபடி கிளையை விட்டான்.

"இந்த கிளைகளைக் கூடத் தொட முடியாதுங்க. வெறும் முள்ளாயிருக்கும். அதனாலதான் பழங்களை குச்சியால தட்டினேன். இது பேரு பேக்கடுகு பழம் சாமி."

நீலன் கூறிவிட்டு குச்சியால் தட்டத் தட்ட கீழே விழுந்த பழங்களை அவர்கள் எடுத்துச் சாப்பிட்டனர். மிளகு அளவில் கருப்பாக இருந்த பேக்கடுகு பழங்கள் மிகச் சுவையாக இருந்தன. அய்யனார் கோவில் அருவியில் குளிக்க வந்தனர் மாணவர்கள். அங்கு குளித்துக் கொண்டிருந்த இரண்டு பெரியவர்கள் அந்த மலையின் முக்கால் வாசி உயரத்தில் இருக்கும் பாவரசியம்மன் கோவில் பெருமைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

அதைக் கேட்ட இவர்கள் நீலனிடம் கோவில் பற்றி விசாரித்தனர்.

"இப்ப நீங்க வாரதா இருந்தா நானே

''பாட்டி நான் ஓட்டப் பந்தயத்துல ஓடப் போறேன்.''
''சார் சொல்றபடி ஒருத்தர் பின்னாடி ஒருத்தரா நிதானமா ஓடணும் தெரியுதா?''
— மூ. தனகோபாலன்

மாவரசியம்மன் கோவிலுக்கு கூட்டிப் போறேன். மதியம் அங்கேயே நீங்க கொண்டாந்திருக்கும் சாப்பாட்டை சாப் புட்டுட்டு கோவில் கேணியில் குளிச்சிட்டு மூணு மணிக்கு எறங்கிடலாம்'' என்றான் நீலன். எல்லோரும் ஆயத்தமாயினர்.

"நாயை எங்கப்பா காணலே?'' என்றான் ஒருவன்.

நாயைத் தேடினர். சிறிது நேரங்கழித்து எங்கிருந்தோ ஓடி வந்த நாய் முன்னே போகாமல் இவர்களின் கால்களையே சுற்றிச் சுற்றி வந்தது.

"சாமி, நாயி ஏதோ மிருக வாடையெ பிடிச்சி அங்க போயிருக்கு. கரடியோ சிறுத்தையோ பாத்து இத விரட்டியிருக் கும். அதான் பயந்து முன்னே போகாமே நம்ம கால்களைச் சுத்தியே வருது.''

"அப்ப அது நம்மள விரட்டி வந்துச் சுன்னா?''

''நம்மளப்பாத்து அது பயந்து ஒளிஞ்சிருக்கும் சாமி. ஏதேனும் காரணமில்லாமே எந்த மிருகமும் மனுசங்களை விரட்டாது.''

"சரிப்பா, நீ பாதை மாறி டாம முன்னால பாத்து கூட்டிப் போப்பா!''

''பாதை மாறாது சாமி. அதான் அங்கங்கே பாறை கள்ள அம்புக்குறி போட்டிருக் காங்களே! கோவிலு வரைக்கும் சின்னப் புள்ள கூட போயிட லாம்.''

"சரி, புறப்படலாம்'' என் றான் இளங்கோ.

அவர்கள் மலை மேலே ஏறத் தொடங்கினார்கள்.

"எப்பவும் மலைக்கு வரும் போது நாயை மட்டும் கூட்டி யாரக்கூடாது.''

"ஏன் நீலா அப்படி?''

''நாய் குரைக்கிற சத்தம் கேட்டா யானை வரும், நாம் மட்டுமானா தப்பிச்சி ஒளிஞ்சிக்கிடலாம். நாயி அதப்பாத்துக் குரைக்கும். யானைக்குக் கோபம் வரும். நம்மள விரட்டும்.''

"நாங்க வேணுமுன்னு கூட்டிவரலே நீலா. நாங்க சைக்கிள்ள வந்தோம். இது எங்களுக்குத் தெரியாம பின்னாலயே ஓடி வந்திருக்கு'' என்றான் கண்ணன்.

சிறிது நேரத்தில் அவர்கள் கோவிலுக்கு வந்து சேர்ந்தனர். இரண்டு பக்கம் ஆறு கள்; நடுக்கரையில் பெரிய மேடைகட்டி அதில் உயரமான திண்டில் மாவரசியம் மன் கோவில் இருந்தது. சுற்றிலும் மலை கள்! மொத்தத்தில் அந்த இடம் அழகான, அருமையான சூழலில் அமைந்திருந்தது. அவர்கள் கோவில் மேடையில் அமர்ந் தனர். சாமியை வேண்டிக் கொண்டு காலார ஓய்வெடுத்தனர்.

''சாமி வாங்க, கோவில் கேணியில் குளிச்சிட்டு வருவோம்.''

எல்லோரும் நீலனின் பின்னால் சென் றனர்.

கோவிலுக்கு பின்புற ஆற்றில் ஒரு கேணியில் தண்ணீர் நிறைந்திருந்தது. சிறு





சிறு மணல் கூட கண்ணுக்குத் தெரிந்தது.

"மழையே இல்லேன்னாலும் இந்தக் கேணி வத்தாது சாமி. தண்ணிய குடிச்சிப் பாருங்க தேனா இனிக்கும்."

அவர்கள் தண்ணீர் குடித்து அதில் குளித்து விட்டு, கொண்டு வந்த உணவை சாப்பிட்டு, கோவிலுக்கு வந்து சாமி கும்பிட்டு, உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

தூரத்தில் உச்சிப் பாறையில் மனிதர்கள் ஏறமுடியாத இடத்தில் பெரிய பெரிய தேன் கூடுகள் இருந்தன.

இரண்டு பக்க ஆறுகளில் தண்ணீர் ஓடும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

'தொபீர்! என சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தனர். உச்சிக் கிளையிலிருந்து விழுந்த மிகப் பெரிய மலைப் பாம்பு அசைய முடியாமல் பாறையில் அப்படியே இருந்தது.

"அடேயப்பா! பெரிய மலைப்பாம்பில்லே!"

"வாடா கொல்லுவோம்."

இரண்டு மாணவர்கள் கோவிலில் நட்டு வைத்திருந்த சூலங்களைத் தூக்கிக் கொண்டு பாம்பைக் கொல்ல ஓடினர்.

"சாமி அவங்கள வேண்டாமுன்னு சொல்லுங்க சாமி என்று அலறினான் நீலன்."

"கேட்க மாட்டாங்கப்பா."

"ஹோ" என்ற சத்தத்துடன் நீலன் திங்குதிங்கு என்று ஆட ஆரம்பித்தான்.

"சாமி வந்திருச்சிப்பா" என்றதும் மாணவர்கள் கலவரத்துடன் நீலனைச் சூழ்ந்து கொண்டனர். சூலத்துடன் ஓடியவர்களும் வந்து விட்டனர்.

"சாமி என்ன விசயம்?" என்றான் ஒருவன்.



"அந்தப் பாறைக்கு அப்பால ஒரு சிறுத்தைப் புலி பசியோட வந்திச்சி. உங்கள்ல யாரையாவது தூக்கிக்கிட்டுப் போக நேரம் பார்த்தது. நான்தான் பாம்பா மாறி பாறையில் விழுந்தேன்; சிறுத்தை ஓடிடுச்சு. தண்ணீ கொண்டாங்கப்பா."

நீலன் ஆடிக் கொண்டே சொன்னதைக் கேட்ட அவர்கள் சூலங்களைக் கோவிலில் வைத்து விட்டனர். தண்ணீர் குடித்ததும் சாமி மலையேறி நீலன் உட்கார்ந்தான்.

"சரி புறப்படுவோம்" என்றதும் அவர்கள் இறங்கலாயினர்.

இளங்கோ, நீலன் அருகில் சென்று, "என்னப்பா இதெல்லாம்" என்றான் இரகசியமாக.

"இதெல்லாம் சும்மா சாமி! பாவம், அழிஞ்சு வரும் மலைப் பாம்பு இனத்தைக் கொல்ல வேண்டாமன்னு நினைச்சி செஞ்சேன்."

நீலனின் கையைக் குலுக்கினான் இளங்கோ.

கேட்கட்டுமா டாக்டர்?

அரிசியை அதிகமாகச் சாப்பிடக் கூடாதா?

டாக்டர் கு. கணேசன்

● கே. முரளி, தூத்துக்குடி.

? காய்ச்சலின் போது தெர்மாமீட்டரை நாக்கின் அடியில் வைத்து உடம்பின் வெப்பத்தை அளக்கிறார்களே, ஏன்?

! உடம்பின் உண்மையான வெப்பம் என்பது 'உடம்பினுள்ளே' இருக்கும் வெப்பநிலையைக் குறிக்கும். முகம், முதுகு, கை, கால், மார்பு, வயிறு, தொடை போன்ற உடம்பின் வெளிப்பகுதிகளில் நிலவுகின்ற வெப்பத்தை வெளிக்காற்று, வியர்வை, உடைகள் போன்ற சுற்றுப்புறச் சூழல்கள் மாற்றி விடும். ஆகவே, இந்த இடங்களில் தெர்மாமீட்டரை வைத்துப் பார்த்தால், அது சரியான வெப்பநிலையாக இருக்காது. இதனால் சுற்றுப்புறச் சூழல்களால் பாதிக்கப்படாத இடங்களில் தெர்மா மீட்டரை வைத்துப் பார்க்க வேண்டும். இதற்குப் பிரதானப் பகுதி நாக்கின் அடிப்பகுதி! அடுத்தது, அக்குள்!




அக்குள் கூட சில நேரங்களில் வியர்வையால் வெப்பநிலையைத் தவறாகக் காண்பித்து விடும். ஆனால் நாக்கின் அடிப்பகுதி அப்படியில்லை. எப்போதுமே உடம்பின் வெப்பநிலையை மிகச் சரியாகக் காண்பிக்கும். அதனால்தான் தெர்மா மீட்டரை அங்கு வைத்து உடம்பின் வெப்பத்தை அளக்கிறார்கள், மருத்துவர்கள்.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? உடம்பில் குளுக்கோஸ் ஏற்றும் போது, ஒவ்வொரு சொட்டாக உள்ளே செல்லும்படி வைப்பது ஏன்? வேகமாகச் செலுத்தினால் என்ன நிகழும்?

! நோயாளிக்கு செலுத்தப்படுகின்ற குளுக்கோஸ் அல்லது சலைனின் வேகத்தை பல விவரங்களின் அடிப்படையில் அமைத்துக் கொள்கிறார்கள், மருத்துவர்கள். அதாவது நோயாளியின் நோய், ரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, உடல் திரவ நிலை,



நச்சு நிலை, அயனிகளின் அளவு, அவசர நிலை போன்றவற்றை அறிந்து கொண்டு அதற்கேற்ப நோயாளிக்குத் தேவைப்படுகிற வேகத்தில் அவற்றைச் செலுத்துவார்கள். மெதுவாக செலுத்த வேண்டிய நபருக்கு வேகமாகச் செலுத்தினாலும் ஆபத்து; வேகமாக செலுத்த வேண்டிய நபருக்கு மெதுவாகச் செலுத்தினாலும் விபரீதம்தான்.

● க. அருணாதேவி, தக்கோலம்.

? சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு மெட்ரி



ருலேஷன் பள்ளிகளில் அதிகமாக எழுத்து வேலை கொடுக்கின்றனர். இதனால் குழந்தைகளின் விரல் நரம்பிற்குப் பாதிப்பு ஏற்படாதா, டாக்டர்?

! ஏற்படாது. இன்னும் சொல்லப் போனால் நரம்புகளுக்கு நல்ல பயிற்சிதான். அதே சமயம் குழந்தை களைத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். வயதிற்கேற்ப எழுத்துப் பயிற்சிகளைக் கொடுத்தால் குழந்தைகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

● மு. முஹம்மது நஸ்ருல்லாஹ்,
மானியம் ஆடூர்.

? எங்கள் ஊரில் சின்னம்மை நோய் பரவி வருகின்றது. இதனால் குழந்தைகளாகிய நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். இதைத் தவிர்க்க தகுந்த நடவடிக்கை என்ன, டாக்டர்?

! 'ஏசைக்ளோவிர்' என்ற மாத்திரையை மருத்து



வரின் ஆலோசனையின் பேரில் தடுப்பு மருந்தாக உபயோகித்தால் சின்னம்மை வராது. அத்துடன் இந்த நோய் ஊரில் பரவும் காலத்தில் சுத்தம், சுகாதாரம் கடைப்பிடிக்க வேண்டும். முக்கியமாக நோயாளியுடன் மிக நெருங்கிப் பழகக் கூடாது; தொடக்கூடாது; அவர் பயன்படுத்திய படுக்கை விரிப்புகள், பாத்திரங்கள், உடைகளை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. நோயாளி இருமும் போது, தும்மும் போது அருகில் எவரும் இருக்கக் கூடாது. பாதிக்கப்பட்டது பள்ளிக் குழந்தை என்றால் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு பள்ளிக்கு அனுப்பாமல் இருப்பது நல்லது; அப்போதுதான் பள்ளியில் உள்ள மற்ற குழந்தைகளுக்கு இந்த நோய் பரவாமல் இருக்கும்.

● என். ராஜி, மேலப்பாதி.

? எக்ஸ்-ரே எடுக்கும் போது பருத்தி ஆடைகளையே அணியச் சொல்கிறார்களே, ஏன்?

! எக்ஸ் கதிர்கள் பருத்தி ஆடைகளைத் துளைத்துச் சென்று உடம்பின் உள் உறுப்புகளைப் படம் பிடித்துவிடும். ஆனால் மற்ற உடைகள் எக்ஸ் கதிர்களைத் தடுத்து விடுமாதலால், உள் உறுப்புகளைப் படம்பிடிப்பது சிரமமாகி விடும். இதனால்தான் எக்ஸ்ரே எடுக்கும் போது பருத்தி ஆடைகளை அணியச் சொல்கிறார்கள்.





● எம். சண்முக வடிவு, தஞ்சாவூர்.

? அரிசி சத்துப் பொருள்தானே... பிறகு ஏன் அரிசியை அதிகமாகச் சாப்பிடக் கூடாது என்று சொல்கிறார்கள்?

! அரிசி சத்துப் பொருள்தான். ஆனால் அதில் 'கார்போஹைட்ரேட்' என்ற சத்து மட்டும்தான் பெருமளவில் உள்ளது. மற்ற சத்துகள் இல்லை. நம் உடல் வளர்ச்சி பெறுவதற்கு கார்போஹைட்ரேட், புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் என்று பல சத்துகள் அவசியம். அரிசியை மட்டும் அதிகமாக சாப்பிட்டால் மற்ற சத்துகள் அடங்கிய உணவுப் பொருள்களை சாப்பிட இயலாது. ஆக, மற்ற சத்துகள் நம் உடம்பில் சேர வாய்ப்பு இருக்காது. இதனால் சத்துக் குறைவு நோய்கள் ஏற்பட்டு உடம்பு பாதிக்கப்படும். இதைத் தவிர்க்கவே அரிசியை மட்டும் அதிகமாக சாப்பிடக் கூடாது என்கிறார்கள்.








• பிரெய்லி முறையில் சில எழுத்துகள்

பிரெய்லி



• குமிழ்கள் மீது கை விரல்களால் தடவிப் படிக்கும் பிரெய்லி முறை.

கண் பார்வையுள்ள நமக்கே படிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. கண் பார்வை இல்லாதவர்கள் படிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கும்? பார்வை இழந்தவர்கள் படிப்பதற்கு என்று பல வகை எழுத்து முறைகள் உள்ளன. இவற்றுள் மிகச் சிறந்தது என்று பெரும்பான்மையான நாடுகளில் பின்பற்றப்படுவது பிரெய்லி முறையாகும். இதை உருவாக்கியவர் லூயிஸ் பிரெய்லி என்ற பிரெஞ்சுக்காரர்.

பிரெய்லி தனது மூன்றாவது வயதிலேயே பார்வை இழந்தவர். பாரிஸிலுள்ள பார்வையற்றோர் பள்ளியில் படித்து, அங்கேயே ஆசிரியரானார். ஏற்கெனவே இருந்த சார்லஸ் பார்பியர் முறையிலான எழுத்துகளில் சில குறைபாடுகள் இருந்தன. அக்குறைகளை நீக்கி, எழுத்துகளைத் திருத்தியமைத்தார் பிரெய்லி. பிரெய்லி எழுத்துகள் அதிக பாராட்டுகளைப் பெற்றது.

பிரெய்லி எழுத்துகள் கையால் தடவிப் பார்த்து உணரும் வகையில் குமிழ்கள் போன்று அமைக்கப்பட்டுள்ளன.

பிரெய்லி முறைப்படி புத்தகங்களைத் தயாரிப்பதற்கு தட்டச்சுப் பொறிகளும், அச்சு இயந்திரங்களும் உள்ளன. இவற்றின் உதவியால் இன்று பார்வையற்றோருக்கான நாளிதழ்களும் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

பிருந்தா தொலைத்த கண்ணாடி!

வெ.அ. கார்த்திகேயன்

பிருந்தா அந்தச் சிறிய வீட்டிற்குக் குடி வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. எதிரில் இருந்த பெரிய வீடு வள்ளியினுடையது. வள்ளி படிக்கும் பள்ளியில், அவள் வகுப்புக்கே பிருந்தாவும் வந்து சேர்ந்தாள். வள்ளி படிப்பில் கெட்டிக்காரி என்பதை அறிந்த பிருந்தா அவளுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் நன்றாகப் பழகிய வள்ளி மூன்று முறை, மாதத் தேர்வில் அவள் முதல் இடத்தைப் பிடித்ததும் பிருந்தாவின் மேல் பொறாமை கொள்ள ஆரம்பித்தாள்.

வள்ளிக்கும் பிருந்தாவுக்கும் இரண்டு விஷயங்களில் ஒற்றுமையிருந்தது. ரெண்டு பேருமே படிப்பில் புலி. இருவருமே பார்வை குறைவுக்காகக் கண்ணாடி அணிந்திருந்தனர்.

மாதத் தேர்வு தொடங்க இன்னும் நான்கு நாட்களே இருந்தன. பிருந்தாவும் வள்ளியும் வழக்கம் போல் போட்டி போட்டுக் கொண்டு படித்தனர்.


மூன்றுமுறை பிருந்தாவிடம் கோட்டை விட்டு முதலிடத்தைப் பிடிக்க முடியாமல் இருந்த வள்ளி எப்பாடுபட்டாவது இந்த முறை பிடித்து விட வேண்டுமென்ற தீவிரத்துடன் இருந்தாள். அதற்கான வாய்ப்பு எப்போது கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அது உடனே கிடைத்தது.

மறுநாள் பள்ளி இடைவேளையின் போது இருவரும் சாப்பிட்ட டிபன் பாத்திரத்தைக் கழுவச் சென்றனர். பிருந்தா தன் கண்ணாடியைக் கழட்டி வைத்து விட்டு முகம் கழுவ ஆரம்பித்தாள்.

வள்ளிக்கு மின்னலைப் போல் ஒரு யோசனை தோன்றியது.

பிருந்தாவால் கண்ணாடி இல்லாமல் படிக்கவோ, எழுதவோ முடியாது என்பது வள்ளிக்குத் தெரியும். மெதுவாக அவள் வைத்திருந்த கண்ணாடியை எடுத்துப் பக்கத்திலிருந்த கிணற்றில் வீசி விட்டாள். எல்லாம் நொடியில் நடந்து விட்டது. நல்லவேளை யாரும் கவனிக்கவில்லை.

பிருந்தா கண்



ணாடியை வைத்த இடத்தில் காணாமல் தவித்தாள். எல்லா இடங்களிலும் தேடியும் கிடைக்காததால் அவள் அழுகை அதிகரித்தது. "எங்கப்பா எவ்வளவோ கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைக்கிறார். மறுபடியும் உடனே புதுக் கண்ணாடி வாங்குற அளவுக்கு எங்கப்பா கிட்ட பணம் இருக்காதே! என்ன செய்யப் போறேனோ தெரியலையே" என்று வள்ளியிடமே அழுதாள். அழுது வீங்கிய முகத்துடன் வீடு வந்து சேர்ந்தாள்.

வள்ளி மறுநாள் பள்ளிக்கு வரவில்லை. காரணமறியாது தவித்துக் கொண்டிருந்தாள் பிருந்தா. சிறிது நேரத்தில் வள்ளி வீட்டு வேலையாள் டீச்சரிடம் வந்தான். ''வள்ளிக்கு விபத்து. பள்ளிக்கு சைக்கிள்ள வரும்போது கார் மோதி ஆஸ்பத்திரியில இருக்கு. ஒரு மாதத்துக்கு வர முடியாது போல இருக்கு; சொல்லிட்டு வரச் சொன்னாங்க'' என்றான்.

மாலை பள்ளி விட்டதும் பிருந்தா, வள்ளியைக் காணப் பறந்தாள். வள்ளி கை, கால்களில் கட்டுடன் படுத்துக் கிடந்தாள்.

''வள்ளி, என்னாலதான் பரீட்சை எழுத முடியாம போச்சு. புதுசா கண்ணாடி வாங்கப் பணம் ஏற்பாடு செய்ய ஒரு வாரமாவது ஆகும்னு அப்பா சொல்லிட்டாங்க. சரி, நீயாவது பரீட்சை எழுதுவேன்னு பார்த்தால், உனக்கும் இப்படி ஆயிடுச்சே!'' என்று உண்மையாகவே மனம் கசிந்தாள் பிருந்தா.

அடுத்து வந்த நாட்களில் பிருந்தா, வகுப்பில் நடந்த பாடங்களை நாள் தவறாமல் வந்து வள்ளிக்கு சொல்லிக் கொடுத்து, அவளுடைய தன்னம்பிக்கையை வளர்த்து வந்தாள். இப்படி



குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 க	ப்	ப	ல்		ளி	2 பா	ப்	3 ப
டி			4 வா			ர		ர்
5 கா	ன	ல்				தி	ரு	6 மா
ர			7 ப					
ம்	க	ந்	8 சி		சை	ட்	ரா	9 தி
					10 தி			ந்
டு	ட்	11 பா				ம்	ள	12 சோ
ட்		யூ			13 ம			ச்
14 எ	ஸ்	15 கி	மோ		தி	த்	ரு	16 ப

அன்பு பாராட்டும் தோழிக்கு நாம் எத்தனை துரோகம் செய்து விட்டோம் என்று வள்ளி மனதுக்குள் அழுதாள்.

அவளுக்குத் தீங்கு செய்ததற்குத் தண்டனையாகத்தான் நமக்கு இந்தக் கதி ஏற்பட்டது என்று அவள் உருகினாள். இனிமேலும் பிருந்தாவிடம் தான் செய்த மோசமான செயலை மறைக்கக் கூடாது; நடந்ததை அவளிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டால்தான் நிம்மதி என்ற முடிவுக்கு வந்தாள் வள்ளி.

வழக்கம் போல் அன்றும் வள்ளியைப் பார்க்க வந்தாள் பிருந்தா.

''இந்தா பிருந்தா, நாளைக்கே நீ பரீட்சை எழுதலாம்'' - வள்ளி.

அவள் கொடுத்த சின்னப் பெட்டியை வாங்கிப் பார்த்தாள் பிருந்தா. அதில் ஒரு புதிய மூக்குக் கண்ணாடி இருந்தது.

''நான் தொலைச்சதுக்கு நீ ஏன் புதிய கண்ணாடி வாங்கித் தரணும்?'' என்றாள் பிருந்தா அப்பாவித்தனமாக.

''பிருந்தா, நீ என்னை மன்னிக்கணும்! கண்ணாடியை வேண்டுமென்றே தொலைக்க வைத்தது நான்தான். இந்தத் தடவையாவது முதல் இடத்தைப் பிடிக்கணும்னு நினைச்சு, நேர்வழியில முயற்சி பண்ணாம குறுக்கு வழியில முயற்சி பண்ணினேன். அதுக்கான தண்டனை எனக்குக் கிடைத்து விட்டது. என்னை மன்னித்து, இதை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து உன் தோழியா இருக்க என்னை அனுமதிக்கணும்'' என்றாள் வள்ளி அழுதபடி.

''அழாதே வள்ளி! சில நேரத்துல எல்லோருமே இந்த மாதிரி தவறு செய்வது சகஜம்தான். நான் இப்போ உன்னை, இன்னும் அதிகமா நேசிக்கிறேன். தப்பை மறைக்காமல் மன்னிப்புக் கேட்டபோதே உன் தப்பு மன்னிக்கப் பட்டு விட்டது'' என்றாள் பிருந்தா.

அடுத்து வந்த தேர்வில் இருவரும் முதலிடம் பெற்று, நட்புக்கும், படிப்புக்கும் உதாரணமாகத் திகழ்ந்தார்கள்.

வகுப்பில் முன்பு போல் வேலு பாடத்தைக் கவனிப்பதில்லை. சரியாக படிப்பதுமில்லை. இதைப் பற்றி வேலுவிடம் இன்று கேட்டு விட வேண்டும் என்று அவனைத் தேடிச் சென்றான் பாலு.

"ஏன் கொஞ்ச நாளாவே ஒரு மாதிரியா இருக்கே?" என்று பாலு கேட்டதும், வேலுவின் கண்கள் கலங்கின. இதற்காகக் காத்திருந்தவன் போல் தன் வேதனையை பாலுவிடம் கொட்டத் தொடங்கினான்.

"நாங்க புது வீட்டுக்கு குடி போனோம் இல்லையா!... அதுல இருந்து அப்பாவுக்கு உடம்பு சரியில்லை, வியாபாரத்துல நஷ்டம்... ரொம்பவும் சிரமப்படறார். அப்பாவுக்கு யாரோ மந்திரம் மாயம் செஞ்சு இப்படிப் பண்ணிட்டாங்கன்னு நம்ம ஊருக்குப் புதுசா வந்திருக்குற சாமியார் சொன்னார்.... இதை நிவர்த்தி பண்றதுக்கு நிறையப் பணம் கேட்டார். எங்களால கொடுக்க முடியலை. அப்பா ரொம்பவும் மனசொடிஞ்சு போய் இருக்கார்."

"சாமியார் சொல்றதை நீ நம்பறியா?"

"ஆமா பாலு... அவர் ரொம்பவும் சக்தி வாய்ந்தவர்" என்ற வேலு அந்த நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தான்.

"பாலு... சில தினங்களுக்கு முன்னால அந்தச் சாமியார் கிட்ட ஆசிர்வாதம் வாங்கப் போனேன். சாமியார் என்னிடம் ஒரு செம்பு நிறையத் தண்ணி கொண்டு வரச் சொன்னார்... கொண்டு வந்து கொடுத்தேன். அதை ஐந்து கிளாஸ்ல ஊத்துன்னார். பிறகு ஒவ்வொரு கிளாஸ் தண்ணியையும் எங்கிட்ட தந்து குடிக்கச் சொன்னார். என்ன ஆச்சர்யம்!... முதல் கிளாஸ் இனிப்பா இருந்துச்சு. ரெண்டாவது புளிப்பு. மூணாவது

அதே



அற்புதம்!

அரு.வி. சிவபாரதி

கரிக்குது. நாலாவது துவர்ப்புச் சுவை. ஐந்தாவது ஒரே கசப்பு! ஒரே செம்புத் தண்ணீரில் ஐந்து விதமான சுவை! இப்பப் புரியுதா அவர் எவ்வளவு பெரிய சக்தி படைச்சவர்னு!''

இருவரும் பேசிக் கொண்டே வீட்டை அடைந்தனர். வேலுவின் அப்பாவிடம் உடல் நலம் பற்றி விசாரித்தான் பாலு. வீட்டை கண்களால் நோட்டமிட்டான். விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான்.

அன்று இரவு முழுவதும் பாலுவுக்கு உறக்கம் வரவில்லை. சாமியாரைப் பற்றிய நினைவு மனம் முழுவதும் ஓங்கியிருந்தது. ஐந்து விதச் சுவைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான். கொஞ்சம் கொஞ்சமாக அவன் மனதிற்குள் வெளிச்சம் பரவியது. வேலுவோட அப்பாவின் உடல் நிலை மோசமாகிப் போனதற்கான காரணத்தையும் மனதிற்குள் ஆராய்ந்தான். அதற்கான காரணம் புரியத் தொடங்கியது.

பள்ளி முடிந்ததும் வேலுவையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான் பாலு.

"வேலு... ஒரு அஞ்சு நிமிஷம் பொறு!'' என்று சொன்னவன் உள் அறைக்குள் சென்று திரும்பி வந்தான்.

"வேலு... உள்ளே போய் ஒரு செம்பு நிறையத் தண்ணீரும், ஐந்து கிளாசும் எடுத்துட்டு வா...'' என்றான்.

வேலு புரியாமல் பார்த்தான்.

"எல்லாம்... காரணமாத்தான்.. ஒரு செம்புல தண்ணீ கொண்டு வா.''

செம்பு நிறையத் தண்ணீர் கொண்டு வந்து வைத்தான் வேலு. முன்னால் இருந்த பெஞ்சில் பாலு ஐந்து கிளாஸ்களையும் வைத்தான். ஒவ்வொரு கிளாசாக ஐந்திலும் தண்ணீரை ஊற்றி வேலுவிடம் கொடுத்து ஒவ்வொன்றாகக் குடிக்கச் சொன்னான். வேலுவின் முகம் மலர்ந்தது. ஒரு செம்பு தண்ணீரில் ஐந்து விதமான சுவை! சாமியார் சாதித்த அதே அற்புதம்!

''எப்படிடா பாலு?'' பாலுவை உலுக்கினான் வேலு.

பாலு கலகலவென்று சிரித்தான். "வேலு.. மந்திரம் கால் மதி முக்கால்னு சொல்வாங்க. அந்தச் சாமியாரும் உங்களை இப்படித்தான் ஏமாற்றியிருக்கார்.''

"வேலு, இது ஒண்ணும் பெரிய விஷயமில்லை... ஐந்து விரல்களிலும் ஐந்து விதமான சுவைகளையும் பூசிக்கிட்டேன். ஒவ்வொரு கிளாஸ் தண்ணீரை எடுத்துக் கொடுக்கும் போதும், குறிப்பிட்ட சுவை உள்ள விரலை கிளாஸில் உள்ள நீரில் அமிழ்த்துக் கொடுத்தேன். அவ்வளவுதான், ஒவ்வொரு கிளாசும் ஒவ்வொரு சுவை. சாமியார்தான் இதைச் செய்யணும்னு இல்ல. கொஞ்சம் மூளையை உபயோகிச்சாலே போதும். யார் வேணுமானாலும் செய்யலாம்.''

அதிர்ச்சி குறையாமல் வேலு பார்த்துக் கொண்டிருக்க, பாலு தொடர்ந்தான்:

''வேலு நீங்க புதுசா போயிருக்கும் வீட்டுல காற்றோட்ட வசதி சுத்தமா இல்ல. நல்ல காற்றோட்டமான இடத்துல வசிச்ச உங்கப்பா, இந்த இடத்துக்கு வீடு மாறினதும் மன பாதிப்புக்கு உள்ளாகி இருக்கார். நல்ல தூக்கம் வராம தவிச்சிட்டிருக்கார்.

இந்த மனக் குழப்பத்துல அவரால சரியா சிந்திச்சு சரியான முடிவு எடுக்க முடியாம வியாபாரத்துல நஷ்டம் ஏற்பட்டிருக்கு. நீங்க நல்ல காற்றோட்டம் உள்ள வேறு ஒரு வீட்டுக்குக் குடி போங்க. உங்கப்பாவின் நோயெல்லாம் குணமாயிடும். வியாபாரமும் நல்லா இருக்கும். இதைத் தவிர எந்த மந்திரமோ மாயமோ தேவையே இல்லை.''

சரியாக சிந்தித்து, பொருத்தமான முடிவை எடுத்த அருமை நண்பனைப் பெருமிதம் பொங்கப் பார்த்தான் வேலு. அவனையே தன் அப்பாவிடம் அழைத்துச் சென்று விளக்க வைத்தான். அவரும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு செயல்பட்டார்.

இப்போது வேலுவின் தந்தை நோயாளி அல்ல. அவர் வியாபாரம் அமோகமாக நடக்கிறது!


சிரிப்...



"சின்ன வயசிலே எட்டிக்குப் போட்டியா இருப்பானுங்களே உங்க பசங்க. அவனுங்க ரெண்டு பேரும் இப்போ எங்கே இருக்காங்க?"

"இப்பவும் அப்படித்தான் இருக்காங்க. ஒருத்தன் 'மேட்டூர்'லயும், இன்னொருத்தன் 'பள்ளத்தூர்'லயும் இருக்காங்க."


— டி.என். பாலகிருஷ்ணன், மடிப்பாக்கம்.



"நான் குளிச்சு பத்து நாளாச்சு. அதான் உன் துண்டுல மூஞ்சியைத் துடைத்தேன்!"

"நான் இந்தத் துண்டைத் துவைத்தே ஒரு மாசம் ஆயிடுச்சே!"


— இரா. இராஜராஜன், மூழையூர்.



"கறுப்பு - வெள்ளை டீ.வியைப் போய் கலர் டீ.வி. வாங்கினதாச் சொன்னியே!"

"கறுப்பு, வெள்ளையும் ஒரு கலர்தானே!"


— சி. விஜயக்குமார், தேவனாங்குறிச்சி.



"அவனுக்கு மட்டும் எப்படிடா ஒரு சோப் ரெண்டு நாளைக்கு தான் வருது?"

"அவன் பெயர்தான் 'ஆறுமுக'மாச்சே!"

— எம்.கே. வேங்கவேல், சேலம்.



"மிருகங்களுக்கு கண் பார்வை அதிகம்னு எப்படி சொல்றே?"

"இதுவரையிலும் ஒரு மிருகம் கூட கண்ணாடி போட்டு பார்த்ததில்லையே!"

— ராஜிராதா, திருச்சி.

அழ. வள்ளியப்பா சிறுகதைப் போட்டியில் பரிசு பெறும் ஏழாவது கதை



பரிசு யாருக்கு?

கதிரேசன் வசித்த கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி கிடையாது. அருகிலுள்ள நகரத்திற்குச் சென்று ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தான்.

தினமும் பள்ளிக்கு நடந்துதான் சென்று வந்தான். வகுப்பில் அவனுக்குத்தான் எப்போதும் முதல் மதிப்பெண். அவ்வப்போது கட்டுரை, பேச்சு போன்ற பல போட்டிகளிலும் கூடக் கலந்து கொண்டு பலவற்றில் பரிசுகளும் பெறுவான்.

அவனுடைய கிராமத்தில் பெரும்பாலானோர் கல்வி அறிவு பெறாதவர்கள். கதிரேசனின் ஊருக்கு அருகில் ஒரு தீப்பெட்டி தொழிற்சாலை இருந்தது.

ஊரில் உள்ள பல சிறுவர், சிறுமியர் அங்கு வேலை செய்து வந்தனர். ஏழ்மை காரணமாக சிறு வயதிலேயே அவர்களுக்கு வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை.

அவன் படிக்கும் பள்ளியில் கட்டுரைப் போட்டி ஒன்றை அறிவித்தனர். எழுத்தறிவு இயக்கத்தினர்தான் அதை நடத்தினர். கதிரேசனும் அவனுடைய நண்பன் கணபதியும் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்குப் பரிசு கொடுக்க வந்த எழுத்தறிவு இயக்கச் செயலாளர் இவர்களைப் பாராட்டி வாழ்த்தினார். அதோடு மாணவர்களாலும் கூட எழுத்தறிவு இயக்கத்தில் எப்படி யெல்லாம் தொண்டாற்ற முடியும், தாங்கள் கற்றதை பிறர்க்கு எப்படிக் கற்பிக்க முடியும் என்பதை எல்லாம் விளக்கி உரையாற்றினார். அவருடைய உரை கதிரேசனை மிகவும் கவர்ந்தது.

கதிரேசனின் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புத் தேர்வுகள் முடிந்து முழு ஆண்டு விடுமுறை விட்டனர். கதிரேசன் கணபதியைச் சந்தித்து விடுமுறையில் எழுத்தறிவு இயக்கத்தைத் தங்கள் கிராமத்தில் சிறிய அளவில் ஆரம்பிக்கலாமா என்று கேட்டான். கணபதி தனக்கு ஊருக்குப் போக வேண்டும் என்று மறுத்து விட்டான். ஆனால் கதிரேசன் அதற்காகத் தனது நம்பிக்கையை இழக்கவில்லை.

தன்னம்பிக்கையுடன் தெருவில் உள்ள சிறுவர் சிறுமியரை அழைத்து எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தான்.

என். ஜெயசங்கர்

முதலில் ஒன்றிரண்டு பேரே வந்தாலும், போகப் போக நிறையச் சிறுவர் சிறுமியர் சேர ஆரம்பித்தனர். கதிரேசனும் ஆர்வத்துடன் கற்பித்ததால் நல்ல பலன் இருந்தது.

மூன்று மாதங்கள் ஓடின. பள்ளி திறந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. கதிரேசனிடம் படிக்கும் மாணவர் எண்ணிக்கை பெருக ஆரம்பித்து விட்டது. இதற்குள் அவன் மாவட்ட அளவில் கலந்து கொள்ள வேண்டிய கட்டுரைப் போட்டிக்கான நாளும் வந்தது. அப்போட்டியில் ஐந்து பேர் - கதிரேசன், கணபதி உட்பட - பரிசு பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்வுக்குழு, இவருக்கும் நேர்முகத் தேர்வு நடத்தி, அவர்களுள் ஒருவருக்கு முதல் பரிசு கொடுத்துப் பாராட்ட எண்ணியது. கடைசியில் கதிரேசனும், கணபதியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருவரில் யாரைப் பரிசுக்குத் தேர்வு செய்வது என்று குழம்பினர்.

அப்போட்டிக்குத் தலைமை ஏற்றிருந்தவர்களுள் ஒரு தொழில் அதிபரும் இருந்தார். அவர், தாமே இதற்கு முடிவு கூறுவதாகக் கூறி தம்முடைய தொழிற்சாலையில் நடந்த சம்பவத்தைக் கூறினார்.

"மணி என்பவன் என் தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தான். பக்கத்துத் தொழிலாளிக்கு அருகே ஒரு கடிதம் பறந்து வந்தது. படிக்கத் தெரியாத அலட்சியத்தால் அவன் அதைச் சுருட்டி எறிந்தான். சுருட்டி எறிந்த கடிதம் மணிக்கு அருகே வந்து விழுந்தது. மணி அக்கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தான். அவனுக்கு ஒரே அதிர்ச்சி. காரணம் அதில் அந்தத் தொழிற்சாலையில் குண்டு வைக்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்து, உடனே



யானை பழமொழிகளும் உவமைகளும்



1. யானை வரும் பின்னே
   மணியோசை வரும் முன்னே.
2. யானை அசைந்து தின்னும்
   வீடு அசையாமல் தின்னும்.
3. யானையைப் பார்த்த
   குருடர்கள் போல.
4. யானை இருந்தாலும்
   ஆயிரம் பொன்,
   இறந்தாலும் ஆயிரம் பொன்.
5. யானைப் பசிக்குச்
   சோளப் பொறி போல.
6. யானை விழுங்கிய
   பொறி விளங்காய் போல.
7. யானைக்கொரு காலம்
   வந்தால் பூனைக்கொரு
   காலம் வரும்.
8. யானை படுத்தால்
   குதிரை மட்டம்.
9. யானைக்கும்
   அடிசறுக்கும்!

தொகுப்பு : **தேனி முருகேசன்**

அகற்றவும் என்ற எச்சரிக்கை செய்தியும் இருந்தது. உடனே மணி அதை எடுத்துக் கொண்டு போய் மேனேஜரிடம் கொடுத்தான். மேனேஜர் போலீஸிடம் தகவல் கொடுத்து, நிபுணர் குழு வந்து குண்டை அகற்றியது. தொழிற்சாலை தப்பியது. எல்லோரும் மணியையும், மணிக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தந்தவரையும் பாராட்டினர்.

"நீ கடிதத்தைப் படித்து உடனே என்னிடம் கொண்டு வந்து கொடுக்க வில்லையென்றால் பல உயிர்களையும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள தொழிற் சாலையையும் காப்பாற்றி இருக்க முடி யாது என்று நானும் மணியைப் பாராட்டினேன்."

இந்த நிகழ்ச்சியைக் கூறிய தொழில் அதிபர், "சிறுவன் மணிக்கு படிக்க, எழுதக் கற்றுக் கொடுத்த பெருமைக்கு உரியவன் இந்தக் கதிரேசன்தான். எனவே அவனையே முதல் பரிசுக்குத் தேர்வு செய்யலாம்" எனக் கூறினார்.

"நான் சென்று விட்ட போதிலும் மனம் தளராது ஒரே ஆளாக இருந்து பல சிறுவர்களைக் கற்க வைத்த பெருமை கதிரேசனுக்கே உரியது" என்று கூறிய கணபதி, பரிசுக்கு உரியவன் கதிரேசனே என்றான். பரிசு கதிரேசனுக்கே வழங்கப்பட்டது.

எழுத்தறிவு இயக்கத்தை ஊரில் பெரிய அளவில் ஆரம்பிக்க நிதி உதவி செய்வதாகக் கூறிய தொழிலதிபர் அதற்குத் தலைவராகக் கதிரேசனை நியமிப்பதாகவும் அறிவித்தார்.

"படித்தவர்கள் ஒவ்வொருவரும் எழுதப் படிக்கத் தெரியாத ஒருவருக்கா வது எழுதப் படிக்கக் கற்றுத் தந்தால் கூடப் போதும். நாட்டில் கல்லாமையை அடியோடு ஒழித்து விடலாம்" என்றான் கதிரேசன். உண்மைதானே?

முடிசூட்டு விழா!



சிம்ம ராஜா கோமாளித்தனமான காரியங்களை அடிக்கடி செய்து வந்தார். ஒருநாள் "அமைச்சரே, நம் நாடு முழுவதும் நாளை என் மகன் விக்கிரம சிம்மனுக்கு முடிசூட்டு விழா என்று அறிவிக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்று மன்னர் ராஜசிம்மன் கட்டளையிட்டார். அமைச்சருக்கோ பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இளவரசனுக்கோ மிகவும் குறைந்த வயது. மனதில் போராட்டத்துடன் பேச ஆரம்பித்தார்.

''செய்கிறேன் மன்னா. ஆனால் நீங்கள் இருக்க முடி சூட்டு விழாவிற்கு என்ன அவசரம் வந்தது?'' - அமைச்சர் மெல்லிய குரலில் கேட்டார்.

''மகன் ஆசையைப் பிரியமாக நிறைவேற்றுவது தந்தையின் கடமை அல்லவா? அதனால்தான் இந்த ஏற்பாடு'' - மன்னர் பெருமிதத்துடன் கூறினார்.

திடீரென்று முடிசூட்டு விழா அறிவிப்பைக் கேட்ட ஊரே வியந்தது. அமைச்சருடைய சந்தேகம் மக்கள் மத்தியிலும் இருந்தது.

மறுநாள் உரிய நேரத்தில் மன்னர் சிம்மாசனத்தில் வந்தமர்ந்தார். கூடவே அவர் புதல்வன் விக்கிரமசிம்மனும்.

"இப்போது சிறப்பான முறையில் முடி சூட்டு விழா நடைபெறும்'' - அமைச்சரின் குரல் ஓங்கி ஒலித்தது.


தங்கத் தட்டில் துணி போர்த்திய ஒரு பொருளை இரு மங்கையர்கள் ஏந்தி வந்தனர்.

பல பேர் பார்க்கும் அந்த நேரத்தில் அதிலிருந்த துணியை விலக்கி மன்னர் ராஜசிம்மன் 'டோப்பாவைக்' கையிலெடுத்து மகன் விக்கிரமசிம்மனின் வழுக்கைத் தலையில் சூட்டினார்!.


— அ.கு. கிருஷ்ணன்

தவளைகள் சில தகவல்கள்

ஆழி




○ உலகில், ஆய்வுக்கூடங்களில், ஆராய்ச்சிக்காக மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் உயிரினம் தவளைதான்! அமெரிக்காவில் மட்டும் ஆண்டுதோறும் 2 கோடி தவளைகள் ஆராய்ச்சியில் உயிரிழக்கின்றன!




○... ஆனால், ஒரு சில நாடுகள் தவளைகளுக்காகவும் கவலைப்படுகின்றன. ஆஸ்திரேலியாவில், சிட்னியில், கி.பி.2000 ஆண்டில், ஒலிம்பிக் நடக்கவிருக்கும் இடத்தில் தவளைகள் அதிகம். விழாவுக்கான பணியில் ஈடுபடும்போது தவளைகள் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக, ஒவ்வொரு தவளையின் முதுகிலும் சிறிய ரேடியோ டிரான்ஸ்மிட்டரைப் பொருத்தியிருக்கிறார்கள். தவளைக்கு ஆபத்து என்றால் அந்தக் கருவி அறிவித்துவிடும். காப்பாற்றிவிடுவார்கள்!

○ தவளைகளுக்குக் காதுகள் உண்டு. ஆனால், பனாமா கால்வாய் பகுதியில் வாழும் தவளைகளுக்குக் காதுகள் கிடையாது. அதனால் அவை கால்களையும் விரல்களையும் அசைத்துச் சைகை முறையில் ஒன்றுக்கொன்று கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றன!






○ தென் அமெரிக்காவின் தெற்குப் பகுதி காடுகளில் விஷத்தவளைகள் வாழ்கின்றன. தவளையின் தோலில் விஷம் சுரக்கிறது. கடுமையான விஷத்தினால் இது எதிரிகளிடமிருந்து தப்பிவிடுகிறது. ஒரு தவளையின் விஷம் 50 மனிதர்களைக் கொன்றுவிடக் கூடியது!




○ அமெரிக்கச் செவ்விந்தியர்கள் 'டென்ட்ரோ பாட்டிடா' என்னும் தவளையின் விஷத்தை அம்புகளில் தடவி, மற்ற விலங்குகளைக் கொல்லுகிறார்கள். எனவே இந்தத் தவளைக்கு 'அம்புவிஷத்தவளை' என்னும் பெயரும் உண்டு.



○ அம்பு விஷத் தவளைகளில், பெண் தவளை இட்ட முட்டைகளை ஆண் தவளை முதுகில் சுமந்து கொள்ளும். முட்டைகள், தலைப்பிரட்டை யாகி, நீரில் நீந்துகிற வரையில் முதுகில் சுமந்து கொண்டு திரியும்!





○ 'ஹைலா' என்னும் அமேசான் மரத் தவளை, முட்டையிடுவது விநோதம். அது மரக் கிளையில் பொந்தான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதில் தேன் கூட்டின் மெழுகைக் கொண்டு வந்து பூசுகிறது. கிண்ணம் மாதிரி உள்ள அந்த இடத்தில் மழைநீர் நிரம்பியதும் அதில் முட்டையிடுகிறது!




○ தவளைகளின் தோலில் சுரக்கும் திரவங்களைப் பயன்படுத்தி, சித்தப் பிரமை முதல், நுண்கிருமி பாதிப்பு வரையிலான பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என்றும், வலி நிவாரணத்திற்கான மருந்தான மார்பைனைப் போல 200 மடங்கு சக்தியுள்ள மருந்தைப் பெறலாம் என்றும் கூறுகிறார் ஆஸ்திரேலிய விஞ்ஞானி டாக்டர் மைக்கேல் டைலர்.

○ மிகப் பெரிய தவளை 'கோலியத்' தவளை. 80 செ.மீ. நீளம் இருக்கும். மிகச் சிறிய தவளை 'பாச்சைத் தவளை.' முழு வளர்ச்சியே சுமார் 1. செ.மீ. நீளம் தான்!







○ பாலைவனத் தவளையின் தோலில் சுரக்கும் திரவத்தைப் பசையாகப் பயன்படுத்தி, அறுவைக்குப் பிறகு கிழிக்கப்பட்ட பகுதியை ஒட்டி விடலாம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்!



○ அனைத்து இனத் தவளைகளிலும் மிகவும் பலம் வாய்ந்தது 'சிறுத்தைத் தவளை.' உடலில் சிறுத்தை மாதிரி புள்ளிகள் இருக்கும். சிறுத்தைத் தவளைகள் ஓரிடத்தில் இருந்தால், மற்ற எல்லா இனத் தவளைகளையும் கொன்று விடும்! அதன் தோல் மிகவும் உறுதியானது!




○ புகை நிறக் காட்டுத் தவளை மரக்கிளையில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டுதான் இரை பிடிக்கும்! முன்னங் கால்களால், இரையை உறுதியாகப் பற்றிக்கொள்ள இப்படிச் செய்கிறது!



○ ஒரே சமயத்தில் அதிக அளவு இரை தின்பது புகை நிறக் காட்டுத் தவளை. அதன் இரைப்பை அதிகமாக விரிந்து கொடுக்கக் கூடியது. தன் உடல் எடையில் மூன்றில் இரண்டு பங்கு [$\frac{2}{3}$] எடையுள்ள வௌவாலைக்கூட அது தின்றுவிடும்!

குரைக்கிறமாதிரி குரல் எழுப்பக் கூடியது 'குரைக்கும் தவளை.' இது எதிரியை விரட்டுவதற்காகத் தன் உடலை 'புஸ்' என்று பலமடங்கு உப்பிக் கொள்ளும்!





○ ஆஸ்திரேலியாவிலுள்ள 'வாட்டர் பக்' தவளை, மழைக்காலத்தில் உடலில் நிறைய நீரைச் சேமித்துக்கொள்ளும். இந்த நீரைக் கொண்டு $1\frac{1}{2}$ ஆண்டுகள் கூட நீரின்றி இருந்துவிடும்!

கார்ல் லூயிஸ்
உலக சாதனைகள்

100மீ ஓட்டம்	9.92 நொடிகள்	சியோல்	1988	செப் 24
	9.86 நொடிகள்	டோக்கியோ	1991	ஆக 25
4X100மீ தொடர்	37.86 நொடிகள்	ஹெல்சிங்கி	1983	ஆக 10
	37.83 நொடிகள்	லாஸ் ஏஞ்சல்ஸ்	1984	ஆக 11
	37.79 நொடிகள்	மோனாகோ	1991	ஆக 3
	37.67 நொடிகள்	ஜூரிச்	1991	ஆக 7
	37.40 நொடிகள்	பார்சிலோனா	1992	ஆக 8

முக்கிய வெற்றிகள்:

100 மீ : உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் முதலிடம் - 1983, 1987, 1991
ஒலிம்பிக்கில் முதலிடம் - 1984, 1988
200 மீ ஓட்டம் : ஒலிம்பிக்கில் முதலிடம் - 1984
ஒலிம்பிக்கில் இரண்டாமிடம் - 1988
உலக சாம்பியன்ஷிப்பில் மூன்றாமிடம் - 1993
4X100மீ : தொடர் உலக சாம்பியன்ஷிப்பில் முதலிடம் - 1983, 1987, 1991
ஒலிம்பிக்கில் முதலிடம் - 1984, 1992
நீளந்தாண்டுதல் : உலகக் கோப்பையில் முதலிடம் - 1981
உலக சாம்பியன்ஷிப்பில் முதலிடம் - 1983, 1987
உலக சாம்பியன்ஷிப்பில் இரண்டாமிடம் - 1991
ஒலிம்பிக்கில் முதலிடம் - 1984, 1988, 1992, 1996



திடகள விளையாட்டுகளில் தன்னிகரற்றவர் கார்ல் லூயிஸ். 1985ல் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் மட்டுமே நான்கு தங்கப்பதக்கங்கள். அட்லாண்டா ஒலிம்பிக்கில் ஒன்பதாவது தங்கப்பதக்கத்தையும் தட்டிச் சென்ற கார்ல்

குட்பை கார்ல் லூயிஸ்!

இவ்வாண்டு ஓய்வு பெறுகிறார்.

1980ல் மாஸ்கோ ஒலிம்பிக்கை அமெரிக்க அரசு

புறக்கணித்தது. அதனாலேயே இன்னும் பல பதக்கங்களை வெல்லும் வாய்ப்பு பறிபோனது. அப்போது அவருக்கு வயது 19.

அமெரிக்காவில் உள்ள பெர்மிங்காமில் 1961 ஆம் ஆண்டு பிறந்த கார்ல் லூயிஸ் 'மீட்டர்' கணக்கில் சாதனைகள் செய்திருக்கிறார். தொடர்ச்சியாக நான்கு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று தங்கப்பதக்கங்கள் வென்றவர் கார்ல் லூயிஸ்.

கார்ல் வென்ற கடைசி ஒலிம்பிக் பதக்கம் நீளந்தாண்டுதலுக்காகக் கிடைத்தது. "இதற்கு முன் பெற்ற பதக்கங்கள் அனைத்தும் என் உடலாலும், மனதாலும் பெறப்பட்டவை. இப்பதக்கமோ என் இதயத்தால் வெல்லப்பட்டது" என்று கூறி மகிழ்ந்தார் கார்ல். ஒலிம்பிக்கில் பத்தாவது பதக்கத்தைப் பெறாமலேயே அவர் ஓய்வு பெறுவதில் தடகள ரசிகர்களுக்கு மிகவும் வருத்தம்தான். "இன்னும் என்னால் போட்டிகளில் பங்கேற்க முடியும். மனரீதியாக இது ஓய்வு பெற வேண்டிய தருணம்" என்கிறார் கார்ல்.

கார்ல் லூயிஸ் கூறுகிறார்: "நான் சிறுவயதிலிருந்தே இலக்கை அடைவதற்கான முனைப்புடன் செயல்பட்டு வருகிறேன். என்னால் என்ன செய்ய முடியும் என நான் உணர்கிறேன். அதைச் சிறப்புடன் செய்ய எனக்கு நானே சவால் விடுகிறேன். அதனால்தான் ஒரே ஒலிம்பிக்கில் நான்கு தங்கப்பதக்கங்களை என்னால் வெல்ல முடிந்தது."

இந்நூற்றாண்டின் இணையற்ற தடகள வீரர் கார்ல் லூயிஸிற்கு நல்விடை கொடுத்தனுப்புவோம்.

— விளையாட்டுப் பையன்



கிரிக்கெட் டேட்டா

- ஒரு நாள் ஆட்டங்களில் மிகக் குறைந்த பந்துகளில் சதமடித்தவர் சாஹித் அப்ரிடி ஆவார். இதற்கு இவர் 37 பந்துகளைச் சந்தித்தார். இலங்கைக்கு எதிராக இவர் இச்சாதனை புரிந்தார்.
- ஒரு நாள் ஆட்டங்களில் மிக அதிக ஓட்டங்களைக் குவித்தவர் சயீத் அன்வர். இவர் 194 ஓட்டங்களை இந்தியாவுக்கு எதிராகக் குவித்தார்.
- டெஸ்ட் பந்தயங்களில் லாரா அதிகபட்சமாக 375 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.
- டெஸ்ட் போட்டியில் ஜெயசூர்யா - மகானமா ஜோடி அதிகபட்சமாக 558 ஓட்டங்களை இந்தியாவுக்கு எதிராகக் குவித்துள்ளனர்.
- டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி மிக அதிகமாக 952 ஓட்டங்களைக் குவித்துள்ளது. (இந்தியாவுக்கு எதிராக)

கோ. முத்துகுமார்,
ஒன்பதாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
அரசு மேல் நிலைப்பள்ளி,
பெரிய தச்சூர் (அஞ்சல்) திண்டிவனம்.

உங்கள் நூலகம் அடுத்த இதழில் இடம் பெறும்.

துணுக்குகள்...

எருமையின் வெற்றி




மாட்டுச்சண்டை ஒரு நாட்டின் உரிமையையே வாங்கிக் கொடுத்துள்ளது. நான்காம் நூற்றாண்டில் ஜாவா நாட்டிற்கும், மலாயா நாட்டிற்கும் இடையே சுமத்ரா தீவு யாருக்குச் சொந்தம் என்பதை முடிவு கட்டும் ஷயமாகச் சண்டை மூண்டது.

வீரர்களைப் பலியிடாமல் இந்த விஷயத்தைத் தீர்க்க, இரண்டு நாட்டு ஜெனரல்களும் ஓர் ஏற்பாடு செய்தனர். அதாவது இரண்டு பேரும் தங்கள் தங்கள் நாட்டின் ரதிநிதிகளாக இரண்டு எருமைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஜாவா, மலேயா நாட்டின் பிரதிநிதிகளாக இவையிரண்டும் சண்டையிட வேண்டும். ந்த நாட்டின் எருமை ஜெயிக்றதோ அந்த நாட்டுக்குச் சுமத்ரா தீவு சொந்தம். எருமைகள் இரண்டும் மோதிக் கொண்டன. முடிவில் மலாயா நாட்டு எருமை வெற்றி கண்டது. இன்றும் சுமத்ரா தீவின் பெரும்பகுதி ...ங்காபா' என்றே அழைக்கப்படுகிறது. அதன்பொருள் 'எருமையின் வெற்றி' என்பதாகும்.

நான்கில் மோகம்


ஜெர்மனியை ஆண்ட நான்காம் சார்லஸ் மன்னர் கி.பி. 1316 முதல் 1387 வரை வாழ்ந்தவர். இவருக்கு 4 என்ற எண்ணில் மோகம் அதிகம். அவர் தினமும் 4 முறை சாப்பிடுவார். அதில் 4 வகை பண்டங்கள் இருக்கும். தினமும் 4 மாளிகைகளில் தங்குவார். ஒவ்வொன்றிலும் 4 அறைகள். அதில் 4 சரவிளக்குகள். 4 வாயில்கள். தினமும் 4 வித வண்ணங்களில் உடை அணிவார். அவரது மகுடத்தில் 4 முகப்புகள் உண்டு. தம் ஆட்சிக் காலத்தில் ஜெர்மனை 4 மாநிலங்களாகப் பிரித்தார். சேனைகளையும்



வகையாக்கினார். ஆட்சிப் பொறுப்புக்கும் 4 கோமான்கள், 4 கவர்னர்கள், 4 ஜெனரல்கள் ஆகியோரை நியமித்தார்.

அந்த நான்காம் சார்லஸ் மன்னர் மரணப் படுக்கையில் கிடந்தபோது, அவருக்கு 4 டாக்டர்கள் மருத்துவம் பார்த்தனர். இறுதியில் மாலை 4 மணியாகி 4 நிமிடங்கள் முடிந்ததும் அவர் நாலும் துறந்தார். ஆமாம்! உயிரையே விட்டார்.

வீடு—அதை விடு



மாவீரன் அலெக்ஸாண்டர் தன்னுடைய படையை 'தீப்ஸ்' நகரத்தின் மீது ஏவிய போது, அந்நகரம் யானைக் கால்களிடையே சிக்கிய தேரைப் போலச் சின்னாபின்னமாகிக் கொண்டிருந்தது.

அப்போது அங்கு வந்த அலெக்ஸாண்டர் குறிப்பிட்ட ஒரு வீட்டை மட்டும் இடிக்காமல் 'விட்டுவிடுங்கள்' எனக் கட்டளையிட்டான். அந்த வீடு யாருடையது என்கிறீர்களா? 'பிண்டார்' என்ற இசைக் கலைஞன் வாழ்ந்த வீடாகும்.

- டி.எஸ். பாலு,
சென்னை - 41.

ஒளிந்திருக்கும் தீபாவளி பட்சணங்களைக் கண்டு பிடியுங்கள்! — போட்டி முடிவு


இந்தப் போட்டியில் ஏராளமான வாசகர்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலானோர் சரியான விடையையே தந்திருக்கிறார்கள். எனவே பரிசுக்குரியோரை குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்க முடிந்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:


1. பி. மகாலட்சுமி, கோயம்புத்தூர்.
2. ஆர். செந்தூர் பாண்டியன், திருப்பாப்புலியூர், கடலூர்.
3. என். தெய்வானை, திருச்சி மாவட்டம்.
4. ப. விவேக், விருத்தாசலம்.
5. எஸ். தஹ்ஸின் நிலோபர், வெளிப்பட்டணம், இராமநாதபுரம்.
6. க. கிருபானந்த், ஈரோடு.
7. ஆர். ராதிகா, ராணிப்பேட்டை.
8. மோனிகா, முகவூர், விருதுநகர் மாவட்டம்.
9. எஸ். இந்திரா தேவி, மேலநம்பிபுரம், தூத்துக்குடி மாவட்டம்.
10. என். செந்தில் குமார், தர்மபுரி.
11. வி. பிரேமா, பொள்ளாச்சி.
12. சுக. நிலா, திருநள்ளார், காரைக்கால்.
13. கே.எஸ். முகம்மது யூசுப் ஷா, அன்னவாசல், புதுக்கோட்டை.
14. ப. தமிழ்மொழி, சீலநாய்க்கன்பட்டி, சேலம் மாவட்டம்.
15. ஜி. மீனா, கடையநல்லூர், தென்காசி தாலுகா.

சரியான விடை:

1. பூந்தி
2. முறுக்கு
3. சீடை
4. அல்வா
5. ஜாங்கிரி



பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



வாய் அசைக்கும் நரி!

வழக்கம் போல் சதுர வடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

1. தாளை மேலிருந்து கீழ் நோக்கி மடிக்கவும்.

2. இப்போது நீண்ட செவ்வகம் கிடைத்திருக்கும்.

3. மீண்டும் வலது பக்கத்தை இடது பக்க முனையைத் தொடுமாறு மடிக்கவும். இப்போது சின்ன சதுரம் கிடைக்கும்.

4. மீண்டும் செவ்வக நிலைக்கு தாளைக் கொண்டு வரவும்.

5. செவ்வக வடிவத்தின் நடுப் பகுதிக் கோட்டை தொடுமாறு இடது பக்க முனையை மடிக்கவும்.

6. அதே போல் வலது புறத்தையும் மடிக்கவும்.

7. படத்தில் காட்டியபடி மடிக்கப்பட்ட இரண்டு பகுதிகளையும் பிரித்து மடிக்கவும்.

8. சதுரத்திற்கு வெளியே தெரியும் பகுதியை பின்புறம் மடிக்கவும். இரண்டு புறமும் ஒரே மாதிரி மடிப்புகள் கிடைத்திருக்கும். இப்போது முதல் பக்கத்திலுள்ள இடது முனையை படத்தில் காட்டியபடி இரண்டு முறை மடித்து மேல் நோக்கி விடவும்.

9. இப்போது படம் 9-ல் காட்டிய படி உருவம் கிடைக்கும்.

10. அதேபோல் பின்புறத்தையும் மடித்து விடவும்.


11. இரண்டு பக்கமும் மடிக்கப்பட்ட பின் இந்த உருவம் கிடைக்கும்.

12. படம் 12-ல் உள்ளது போல் மேல் நோக்கி வைத்துக் கொண்டு நடுப்பகுதியை இரண்டு புறமும் லேசாக உள்நோக்கி இழுக்க வேண்டும். (கப்பலுக்கு செய்வது போல்)

13. இழுத்த பின் இந்த உருவம் கிடைக்கும்.


14. இறுதியாக இதோ வாயசைக்கும் நரி தயார். விரலில் மாட்டிக் கொண்டு அசைத்தால் நரி வாயசைக்கும்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription — (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



எந்த இரண்டு பலூன்கள் ஒன்றாக இருக்கின்றன?

விடை: A, C




''உன் எடை குறைய நீ தினமும் 2 சப்பாத்திதான் சாப்பிடணும்.''

''சாப்பிடுவதற்கு முன்பா, பின்பா டாக்டர்?''

— எஸ். ஜானகிராமன், சிறுவள்ளிக்குப்பம்.

''உங்க வீட்டு கலர் டீ.வி. ஏன் ஒரு மாதிரியாய் இருக்கு?''



''புதுசு, அதான் சாயம் போகுது!''

— பாளை பசும் பொன், மகராஜநகர்.



''நடந்துதானே பள்ளிக்கூடம் போறே, அப்புறம் எதுக்கு 'ஹெல்மெட்' கேட்கிறே?''

''வாத்தியார் தலையில குட்டுகிறாரே!''

— த. வரதன், மன்னார்குடி.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

